விசேஷ விளம்பரத்திற்கு!

# இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈச னெந்தை யிணையடி நீழலே.

விசேஷ விளம்பரத்திற்கு!

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ம் திகதி ஆரம்பமானது.

[புத்தகம் ௫௩] யாழ்ப்பாணம்:— விஷு ௵ ஆடி மீ ௩0 உ (1941 அக்கஸ்ட் 14 வியாழக்கிழமை) [இலக்கம்

## தமிழ் இலக்கிய மகா நாட்டுத் தலைமையுரை

(சென்னைச் சர்வகலாசாலைத் தமிழாராய்ச்சித்துறைத் தலைவர் ராவ்சாகிப் திரு. S வையாபுரிப்பிள்ளை, B. A. B. L அவர்கள்)

(முற்றொடர்)

"ஒரிய வாயிற் குமரிலே தென் பாண்டி நாடனைக்கவாய்" என்பது குமிறப்பத்து. ஆனால் பாண்டிநாட்டைக் 'குமரி நாடு' அல்லது 'கன்னி நாடு' என்பது பழையதொரு வழக்கு. குமரியம் பெருந்துறை இந்நாட்டிலிருப்பதாதல் பற்றி இப்பெயரெழுந்தது. கன்னிநாடு என்ற வழக்குண்மை,

"செக்கெறி விளக்குகின்றார்
திருமறைக் காடு சேர்ந்த
கன்னிலே கன்னிநாட்டு கல்வினைப்
பயத்தாற் கேட்டார்"

என்ற பெரிய புராணச் செய்யுளால் அறியலாம். இக்கன்னிநாடு லக்ஷணம் ஆறைவனுக்குரியதாயிற்று? இவ்வினுயிற்கு, தடாதகை யெனும் செழியர் குலப் பெண்ணாகி இறைவனைத் திருமணஞ் செய்துகொண்டான் என்னும் வரலாறு தக்க விடை பளிக்கின்றது.

இவ்வரலாற்றினையும் பிற வரலாறுகளையும் தொகுத்துத் திருவாதவூருடையார் திருவிளையாடற் புராணம் எழுத்து. இதுபோன்றே திலையம்பதி பற்றிக் 'கோயிற் புராணம்' தோன்றிற்று. இங்ஙனம் காளவர்த்தியிற் பல தலங்கட்குப் பல தல புராணங்கள் தோன்றிய வண்ணமாயிருந்தன. இவ்வகையான புராணங்களை மிகுதியாக இயற்றிப் பக்தியைத் தமிழ் மக்களிடைப் பெருக்குவதற்கு முயன்றவர்களுள் இறுதியில் வந்தவர்கள் திருவாவடுதுறை ஆதீன வித்வான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள்.

மதுரை மாநகரின் மாஹாத்மயம் ஸ்தலபுராணங்களைப் பெருக்குதற்கு மாத்திரம் பயன்பட்டது என்று நினைத்தல் சரியன்று. பிரபந்தங்கள் பல தோன்றுவதற்குக் காரணமாயிருந்தது. கோவை, உலா, அந்தாதி, கலம்பகம் முதலியன தோன்றிப் பெருகலாயின. பிறதலங்களின் மாஹாத்மயமும் இங்ஙனமே பிரபந்த வகைகள் பெருகுதற்குக் காரணமாயிருந்தன.

தேவாரம் திருவாசகமாதிய அருட்பாடல்கள் தோன்றும் வரை மதுரையை ஆண்ட பாண்டிய மன்னர்கள் சுயேச்சாதிகாரிகளாயிருந்தனர். அத் திருப்பாடல்கள் எழுந்த காலத்துக்குப் பின்னர் மூன்று நூற்றாண்டுகளாகப் பாண்டிநாடு சோழராட்சிக்குள் வந்து பாண்டிய மன்னர்கள் சுயேச்சாதிகாரத்தை இழந்தனர். இக்காலத்தேதான் மெய்கண்ட சாஸ்திரமாதிய சமய சாஸ்திரங்களும் இதிகாசங்களும் பெரியபுராணமும் சோழதேசத்தில் தோன்றின. பாண்டிய மன்னர் மீண்டும் முயன்று சுயேச்சாதிகாரம் பெற்றுச் சோணாடு கொண்ட காலத்துத்தான் மதுரையின் மாஹாத்மயமும் ஸ்தல புராணங்களும் தோன்றத் தொடங்கின. அம் மன்னர்கள் மீண்டும் அந்நியர் கலாபத்தால் வலியிழந்து பராதீனராயிருந்த காலத்தேதான் பிரபந்த வகைகள் பிரசாரமெய்தின.

இறுதியிற் குறிப்பிட்ட இக்காலத்தில் மதுரையிலே இலக்கியம் பற்றிய ஒரு கிளர்ச்சி எழுந்ததென்று எண்ண இடமுண்டு. தொல்காப்பியம் சங்க இலக்கியங்கள் முதலியவற்றைக் கற்றற்குப் பலரும் விரும்பியிருக்க வேண்டும். பொதுவாகத் தமிழ்க் கல்விக்குப் போதாதவு ஏற்பட்டதெனச் சொல்லுதல் பொருந்தும். எனவே இச்சங்க இலக்கியங்களுக்கு உரைகள் இக்காலத்தே வகுக்கப்பட்டன. பேராசிரியர் மதுரையைச் சார்ந்தவர் என்ற கருதுதற்கு நியாயமுளது. நச்சினார்க்கினியர் நிச்சயமாக மதுரை நகரினர் என்பது "மதுரையாசிரியன் பாரத்துவாசி நச்சினார்க்கினியன்" என்று அவர் தம்மைக் கூறிக்கொள்வதால் விளங்கும். இவ் வுரையாசிரியர்களின் வழியைப் பின்பற்றியே சாஸ்திரங்களுக்கும் 'வியாக்கி' இயற்றப் பலரும் தொடங்கினர்.

காலகதியிலே பாண்டிய வம்சம் நிலைகுலைந்தது. விஜய நகரத் தரசர்களின் பிரதிநிதிகளாகிய நாயக்க அரசர்களின் ஆணைக்கீழ்ப் பாண்டி நாடு அடங்கிற்று. இவ் வரசர்கள் பெரும் பக்திமான்களாயிருந்தனர். கோயிற் திருப்பணிகளை விசேஷமாகச் செய்தனர். தமிழ்மொழியையும் ஒரு வகையாய் ஆதரித்து வந்தார்களெனினும் பாண்டிய அரசர்களைப் போலப் பெருமை பாராட்டித் தமிழ்த்தொண்டியற்றினரெனக் கூறமுடியாது. இவர்கள் காலத்தில் தமிழ்ப்பெரும் புலவராக ஒருவரையே எடுத்துச் சொல்லத் தகும். ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் சிதம்பரச் செய்யுட்கோவை முதலியவற்றைப் பழந்தமிழின் மறுமணங் குன்றாது இயற்றிச் சிற்றிலக்கிய வளர்ச்சிக்குப் பேருதவி செய்தனர்.

நாயக்கவரசர் வம்சமும் 18-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் முடிவுற்றது. சேதுபதிகள் சுயேச்சாதிகாரம் பெற்றனர். இவர்களைக் குறித்துப் பல சிறுபிரபந்தங்கள் தோன்றின. பொன்னுங்கால் அமிர்த கவிராயரியற்றிய ஒருதுறைக் கோவை இங்கே குறிப்பிடத் தக்கது. இக்காலத்திலே மகமதியர்களுக்குச் செல்வாக்குமிகுந்தது. மகமதியப் புலவர்களும் தமிழ் நூல்கள் இயற்றித் தமிழைப் போற்றினர். உமறுப்புலவர் இயற்றிய சீறாப் புராணம் சிறந்த இலக்கியமாக இன்னும் விளங்குகின்றது. ஐரோப்பியர்களும் நமது தேசத்திற்கு வந்து தங்கள் வியாபாரத்தையும் தங்கள் கிறிஸ்து சமயத்தையும் பரப்பி, அரசியல் நிர்வாகத்தையும் கைப்பற்றத் தொடங்கினர். சமய போதனைக்காக இந்நாட்டுக்கு வந்தவர்களுள் பெஸ்கி என்னும் வீரமாமுனிவர் சிறந்தவர். இவர் தேம்பாவணி யென்னுங் காவியத்தை இயற்றியுள்ளார். சேதுபதிகளும் தங்கள் சுயேச்சாதிகாரத்தை இழந்து ஆங்கில அரசாங்கத்துக்கு உட்பட்டனர். எனினும் அவர்களுடைய தமிழ்ப் பற்றுச் சிறிதுங் குறைபடவில்லை. ஆனால், தமிழ் நூல்களைக் கற்றுப் பேணுவார் அரியராயினர். தமிழ்நூற் பரப்பின் எல்லையும் அறிந்து கொள்ளற்கரிதாய் முடிந்தது. உண்மையிற் கற்றறிந்தார் தொகையும் மிகச் சுருங்கிவிட்டது. இந்நிலையில் செலவஸ்ரீ பொன்னுசாமித் தேவரவர்கள் ஸ்ரீ ஆறுமுகநாவலவர்கள் போன்ற தமிழ்ப் பெருமக்களை வரவழைத்து அன்போடு உபசரித்து, அவர்கள் மூலமாகத் திருக்குறள் முதலிய தமிழ்ப்பேரிலக்கியங்களை அச்சுவாயிலாக வெளியிடுவித்தனர். ஸ்ரீ தேவரவர்களது ஆர்வம் தமிழுக்குப் புகலிடமாக விளங்கிற்று.

இக்காலத்தே நிகழ்ந்த இரண்டு பெருநிகழ்ச்சிகளை இங்கே குறித்தல் மிக அவசியமாகும். முதலாவது, 'திராவிட மொழிகளின் ஒப்பு நோக்கிலக்கணம்' டாக்டர் கால்ட்வெல் என்னும் ஆங்கில அறிஞரால் இயற்றி வெளியிடப்பட்டது. இதனால் தமிழ்மொழியின் தொன்மையும் பெருமையும் ஆதாரபூர்வமாக நன்று நிறுவப்பட்டன. பிறிதொரு நிகழ்ச்சியாவது, இப்போதுள்ள தமிழ் நூல்களைத்திற்கும் முற்பட்டதாகக் கருதப்படும் தொல்

தொடர்ச்சி 4ம் பக்கம்

## செந்துல் தமிழ் மாதர் சங்கம்

### முதலாவது வருடாந்தக் கொண்டாட்டம்

இக்கூட்டம் 21-6-41 சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்குத் தம்புசாமிப்பிள்ளைத் தமிழ்ப் பள்ளிக்கூட மண்டபத்தில், பள்ளிக்கூட மாணவிகளின் தேவாரபாராயணத்துடன் ஆரம்பமாயிற்று.

சங்கத் தலைவி ஸ்ரீமதி. கனகசபை செல்லம்மா தலைமை வகித்தார். கௌரவ காரியதரிசியும், தனாதிகாரியும் முறையே தங்கள் அறிக்கைப் பத்திரத்தையும் வரவு செலவுக் கணக்கையும் வாசித்தனர். அவை சபையோரால் அங்கீகரிக்கப்பட்ட பின், புதுவருட கௌரவ உத்தியோகஸ்தர்களும், நிருவாக சபை அங்கத்தினரும பின்வருமாறு தேரிவு செய்யப்பெற்றனர்: போஷகர் ஸ்ரீமதி. விஸ்வலிங்கம் இரத்தினம்மாள் (டாக்டர் ஆ. விஸ்வலிங்கத்தின் மனைவி) தலைவி ஸ்ரீமதி. கனகசபை செல்லம்மா, உபதலைவி ஸ்ரீமதி. கதிர்வேலு நல்லம்மா கௌரவ காரியதரிசி திருச்செல்வி விஸ்வலிங்கம் மகாலட்சுமி, கௌரவ உபகாரியதரிசி ஸ்ரீமதி துரைரட்ணம் ஜெயமணி, தனாதிகாரி ஸ்ரீமதி. குலசிங்கம் பாக்கியம்.

நிருவாகசபை அங்கத்தினர்கள் ஸ்ரீமதிகள் பெருமாள் வேலம்பாள் சி. ஐயப்பா பராசக்தி, பொன்னுஸ்வாமி பத்மாசனி யேசுதாசன், சுசீதமலர், கனகரத்தினம் கனகம்மா, சின்னப்பு இரத்தினம், முத்தையா இரத்தினம், கடவையா பூரணம், செல்லையா சற்குணம், சிவகுரு சிவக்கொழுந்து.

கௌரவ கணக்குப் பரிசோதகர்கள்:- ஸ்ரீமதிகள் ஆநந்தா நாகம்மா தனபாலசிங்கம் தங்கமுத்து

இதன்பின் தேநீர் வழங்கு நடைபெற்றது. தேநீர் விருந்து முடிந்ததும் உருவப்படம் எடுக்கப்பட்டது

பின்னர் ஸ்ரீமதி விஸ்வலிங்கம் இரத்தினம்மாள், சங்கத்தின் போஷகர் அவர்கள், "எம்மக்களின் நிலை" என்னும் விஷயம் பற்றி ஓர் இனிய சொற்பொழிவாற்றினார். பின் ஸ்ரீமதி. துரைரட்னம் ஜெயமணி "தையல்" என்னும் விஷயம் பற்றிப் பேசினார். 7 மணி முதல் ஸ்ரீமதி. ஆறுமுககுட்டி அம்மாளவர்களால் ஓர் இனிய வீணை கச்சேரியும், திருச்செல்வி குப்புச்சாமி ஐயர் ராஜேஸ்வரியால் பாட்டுக் கச்சேரியும் நடத்தப்பட்டது. முடிவில் இச்சங்க ஸ்தாபனத்திற்காகத் தனது சிரமம் பாராது உழைத்த ஸ்ரீமதி. செல்லாச்சி அம்மாளவர்கள், அன்றைய தினம் இக்கூட்டத்தை அவ்வளவு சிறப்பாக நடத்த உதவிய சபை அங்கத்தினருக்கும், சமுகமளித்த மற்றைய சகோதரிகளுக்கும், சங்கீதக் கச்சேரி நடத்தியோருக்கும், ஏனையோருக்கும், சங்கத்தின் சார்பாகத் தனது நன்றியையும் சந்தோஷத்தையும் தெரிவித்தார்கள். அத்துடன் இச்சங்கம் சென்ற வருடத்தில் நம் பெண்மணிகளுக்குச் செய்த நன்மைகளை விளக்கி, எல்லாரையும் அங்கத்தினராகச் சேரும்படி வேண்டிக் கொண்டார்கள். தேவார பாராயணத்துடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

—ஒரு நிருபர்

## வட இலங்கைக் கிராம விருத்திச் சங்கம்

### விடுமுறைநாட் பயிற்சி வகுப்புகள் நடைபெறு

நிகழும் 1941 ம் ஆண்டு ஆவணி மாதம் 25-ந் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் 30ந் திகதி சனிக்கிழமை வரை பங்களூர் கனம் ஆர். ஆர். கயிதான் (Rev. R. R Keithan) அவர்கள் தலைமையில் விடுமுறைநாட் பயிற்சி வகுப்புகள் திருநெல்வேலி பரமேஸ்வரக்கல்லூரியில் நடாத்தப்பெறும் என்று வட இலங்கைக் கிராமவிருத்திச் சங்கத்தார் விளம்பரப் படுத்தியிருந்தனர். ஆயின், ரெவரண்ட் R. R. கயித்தான் அவர்கள் இலங்கைக்கு வருவதை இலங்கையரசாங்கத்தார் தடுத்திருக்கின்றமையால் மேற்படி விடுமுறைநாட்பயிற்சி வகுப்புகள் அறிவித்தல் செய்யப்பட்டபடி நடத்தப்படமாட்டா என்று மேற்படி சங்கக்காரியதரிசி தெரிவிக்கின்றார்.

## ஸ்ரீ சத்திய மூர்த்தியின் விடுதலை

### இம்மாதம் 3ம்-வாரம் வெளிவருவார்

சென்னை ஆக, 9—
ஸ்ரீமான் சத்தியமூர்த்தி சென்றவாரம் ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருந்து சென்னைச்சிறைக்கு மாற்றப்பட்டார். இவரது தேகநிலை சீர்ப்பட்டு வருகிறது. அவர் சிறைச்சாலை ஆஸ்பத்திரியிலேயே இருந்து வருகிறார், சென்னைக்குவெளியே அவர்வேறு எந்தச்சிறைக்கும் மாற்றப்படமாட்டார் எனத்தெரிகிறது. இம்மாதம் மூன்றுவது வாரத்தில் அவர் விடுதலை செய்யப்படுவார்.

## சம்பளம் சம்பந்தமான பிரச்னைகள்

### மந்திரி சபைக்கு அறிவிக்கச் சிபார்சு

கொழும்பு, ஆக, 10—
அரசாங்க வேலையில்லாத் திண்டாட்ட விசாரணைதனின்கீழ் வேலைபார்ப்பவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் சம்பந்தமாக மூனைக்கும்மில விஷயங்களைப் பற்றிக் குறிப்பிட்ட ஒருயோசனையை மேற்கொள்ளுவதற்கு வசதியாகக்குறித்த விஷயங்களை மந்திரிசபைக்கு அறிவிக்கவேண்டுமென்று போக்குவரத்து நிருவாகசபை சிபார்சு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

## காட்டுயானை மிதித்துக் கொன்றது

### வழிப் போக்கர்களின் விபரீத அநுபவம்

தங்காலை, ஆக, 8—
இரத்தினபுரி – அம்பலாந்தோட்டை ரோட்டில் சியம்பலகோட்டை என்னுமிடத்தில் ஒருகாட்டுயானையால் ஒருவர் கொல்லப்பட்டாரென்று அறிவிக்கப்படுகிறது.

காலஞ்சென்ற டேவித் என்பவரும் மற்றும் மூவரும் சூரிய அஸ்தமனத்துக்குச் சற்றைப்பின் மேற்படி ரோட்டுவழியாகச் செல்லும்போது ஒருயானை திடீரென்று காட்டுக்குள்ளிருந்து வெளியே வந்து தாக்கிறென்று தெரிகிறது.

அவர்களிலொருவர் ஓர்மதகுக்குட் போய்ப் பதுங்கிக்கொண்டார், மற்றவர் ஓர் அடர்ந்த புதருக்குள் ஒளிந்துகொண்டார் மூன்றாவதுபேர்வழி ஒரு மரத்தில் ஏறிக்கொண்டார். யானை காலஞ்சென்றவரைத் தூக்கிச்சென்று துதிக்கையால் தலையிலடித்துக் கீழே விழுந்தி வயிற்றிற் காலால் மிதித்துக் கொன்றுவிட்டது.

மற்ற மூவரும் மறுநாட் காலைவரை தாமொளிந்திருந்த இடங்களிலேயே இருந்துவிட்டு விடிந்தபின் வெளியே வந்து பார்த்தபோது காலஞ்சென்றவரின் பிரேதம் ரோட்டருகிற் காட்டிற் குட் கிடந்தது.

ஸ்தலத்தில் மரணவிசாரணை நடைபெற்றது. யானையால் தாக்கப்பட்டு மரணமடைந்ததாக மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

## பழைய நூல்களைப் பாதுகாத்தல்

பத்திராதிபர் அவர்கட்கு,

ஐயா,

சென்ற சிலவாண்டுகளாக யாழ்ப்பாணக் கல்லூரியார் யாழ்ப்பாணத்திலுள்ள பெரியார்களாலும், கிறீஸ்தவ பாதிரிமார்களாலும் எழுதப்பெற்ற பழைய நூல்களையும், தற்பொழுது அச்சில் கிடைக்கப்பெறுத நூல்களையும் தங்கள் நூல் நிலையத்தில் சேர்த்து வைக்கும் பொருட்டுச் செய்து வரும் அரும் பெரும் முயற்சிகளைத் தங்கள் வாசகர்கள் நன்கு அறிவார்கள்.

எங்களுடைய நண்பர்களின் பேருதவியைக்கொண்டு சில புஸ்தகங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. ஆனால், இம்முயற்சி இன்னும் முற்றுப் பெறவில்லை. உதாரணமாக, உவிலியம் நெவின்ஸ், ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை, கரல் விசுவநாதன், உவைமன் கதிரவேற்பிள்ளை, கி. வை. தாமோதரம்பிள்ளை, எ. வாட்ஸன் கனகசபைப்பிள்ளை, கதிரைவேற்பிள்ளை, கைசிற் பாதிரியார், முதலானோர்களைப் போன்ற பெருமக்களாற் செல்லுதப்பெற்ற நூல்களெல்லாம் விரைவாக மறைந்து போகின்றன. அல்லாமலும் சில விஷயங்களைப் பார்ப்பதற்குக்கூடவும் இவற்றைப் பெறுதல் கஷ்டமாயிருக்கின்றது.

முன்னேற்றமுடைய எல்லா மேல்நாடுகளிலும் பொது நூல நிலையங்கள் உண்டாக்கப்பெற்று, அங்கங்கேயுள்ள எல்விதமான நூல்களும் பதிப்புரிமைகளுடன் ஒன்று சேர்த்துச் சேமிக்கப்பட்டுள்ளன. இவ்விதமான நூல நிலையங்கள் எங்கள் யாழ்ப்பாணத்தில் இல்லாததினால் யாழ்ப்பாணத்திலுள்ள புலவர்கள் செய்த சிறந்த நூல்கள் சேர்க்கப்பட்டுச் சேமிக்கப்படாது அழிந்துபோகின்றன. மேலும் எங்கள் பிற்சந்ததியார் பார்வைக்கு மிலலாமல் ஒழிந்துபோகின்றன. ஒரு நாடு முன்னேறவேண்டுமாயின் அந்நாட்டு விசேஷங்களை இளைஞர்களுக்குப் பயிற்றுவதுடன் அவைகளைப்பற்றிய நூல்களும் சேமிக்கப்படவேண்டும்.

இவ்விதமான அரிய தொண்டை அழியாமைக்கப்பெற்ற நூல்நிலையத்தார்க்கு கூடிய யாழ்ப்பாணக் கலாசாரி செய்து யாழ்ப்பாணத்தாருடைய அரும் பெரும் பொக்கிஷமாயுள்ள நூல்களைச் சேமித்து வைத்துப் பின்வரும் சந்ததியாருக்குக் கொடுத்துதவுவதே மிகவும் வேண்டப்பாலதாகும். ஆதலால் இதுகாலுஞ் சிறந்த தமிழ்ப்பெருமக்களாயும் பண்டிதர்களும், மற்றும் விஷயங்களைச் செய்யுமாறு முன்வருவோர்க்கும் மக்களும் நாங்கள் மேற்கொண்ட ஆபெரும் பணியை நிறைவேற்றுவதற்குத் தாங்கள் வைத்திருக்கும் அருமையான புஸ்தகங்களைத் தந்துதவுவதுடன், அரிய புஸ்தகங்கள் வைத்திருக்கும் மற்றைய நண்பர்களை எங்களுக்கு அறிவிக்கும்படி மிகவும் தாழ்மையுடன் வேண்டுகின்றோம். அருமையான பல புஸ்தகங்கள் கறையானுக்கு இரையாகத் தானும்; அல்லது புஸ்தகங்களைப் பாராமல் சிலர் வேறிடங்களுக்குக் கொண்டுபோவதும் எல்லாருமறிந்த உண்மையேயாகும். எஞ்சியுள்ளனவற்றை அந்தந்த இடங்களிலுமிருந்து தனிப்பட்டவர்களிடமிருக்கின்றன. இவைகளும் சேர்த்துச் சேமிக்கப்படாவிடின் விரைவில் அழிந்தொழியும். ஆதலால் நாம் ஆர்வத்துடன் செய்துவரும் இக்காரியம் நிறைவேறும்படி கடவுள் அருள் பாலிப்பாராக.

இப்படிப் புஸ்தகங்களைச் சேர்த்துவரும் நோக்கம் எங்கள் நூல் நிலையத்தைப் பெருப்பிப்பதற்குமல்ல, அல்லது இவைகளை யெல்லாம் ஒரு கண்ணூடி அலுமாரியில் பூட்டி

(தொடர்ச்சி 4ம் பக்கம்

## வாணிக உலகு

S. V. Ram B. A. F. M. C,

(முற்றொடர்)

3 சுருக்கமாகச் சொல்லின் சுகத்தையும் மற்றும் பல வசதிகளையும் கொடுக்கும் பண்டங்களின் உற்பத்தியே மனிதனின் கருமமாகக் காணப்படுகிறது.

4 கருவிகள் (Tools) மனிதனின் சக்தியை அதிகரிக்கின்றன.

5 பண்டங்களின் உற்பத்தியில் தேகப் பிரயாசையும் உழைப்பும் அவசியம் வேண்டும். இது தான் மானிட சுபாவமாகிறது. மனிதனுக்கு எப்படியோ அப்படியே இதர பிராணிகளுக்கும் உரியதாகவே காணப்படுகிறது.

6 கைத்தொழிலின் சம்பந்தமில்லாமல் உண்டாகும் ஊதியமே மூலதனமெனக் கருதவேண்டும் (Capital). கல்வியைச் சம்பாதிக்கப் பொருளும் தேகச் சிரமமும் விரயமாக்க வேண்டிவருவதால் அதி மூலதனமாகாது.

7 மூலதனமானது இருவகைப்படும். (1) ஊதியமுள்ளவை (Lucrative Capital) மனிதனின் வாசஸ்தலங்களும் சுகத்தைத் தரக்கூடியதற்காக அவரு சேகரிக்கப்பட்ட தட்டுமுட்டுச்சாமான்களை ஒத்தவை (2) பயனை அளிக்கும் தன்மை வாய்ந்தவை (productive capital)

8 மனிதனுக்குச் சுகமும் சவுகரியமும் உண்டாக வேண்டுமானால் பண்டங்களின் உற்பத்தியும் அவைகளின் தேவை பாவிப்பும் சமமாக இருக்க வேண்டும்.

9 தேவைக்கு ஒத்த அளவு பண்டங்களின் உற்பத்தி இல்லையேல் சிவிய முடைகளின் சிலவற்றைத் திருப்தி செய்ய முடியாது.

பண்டங்களின் உற்பத்தி அளவிற்கு மீறினால் அது மூலதனத்தையும் பிலத்தையும் வீணாக்கி விடும்.

ஆதலால் பண்டங்களின் உற்பத்தியைச் சனங்களின் தேவையின் திட்டத்திற்குட் படுத்தி வைத்து வருவதே முறை. இவ்வாறு செய்து வருவதில் சிரமமுண்டு. ஏனெனில் வியாபாரிகள் குறுக்கிடுவதால் முடைகளைச் சரிவர நிதானிக்க முடிவதில்லை. இக்காரணத்தைக் கொண்டே நமது முன்னோர்கள் தொழில்களைச் சுருக்கி வைத்தார்கள்போல தோன்றுகிறது.

10 முன் 8 வது பிரிவிற் கண்ட பிரயத்தால் தொழிலாளர்கள் சுயேச்சையைப் பெறுகிறார்கள். அவர்கள் சுயேச்சையைப் பெற்றுவ போட்டி என்பது உதிக்கிறது.

11 போட்டியால் ஏற்படும் கன்மை நிலைமைகளாவன:-

(1) போட்டிஏற்பட்டதும் பண்டங்களின் உற்பத்தியில் திறம் சாக்கை உபயோகிக்க மாட்டார்கள். ஆனதால் கிடைக்கும் பண்டங்கள் போலிப் பண்டங்களே யாகின்றன.

(2) தொழிலாளிகளை அதிகப்படுத்திப் பண்டங்களின் விலைவாசியைக் குறைத்து விடுகிறது.

12 வியாபாரத்துக்கு உடன்பிறந்தது போட்டி. அதைத் தர்ப்பலமாக்காமல் பலப்படுத்துவதே வியாபாரத்திற்கு அழகு.

14 பண்டங்களை அளவிற்கு மீறி உண்டாக்கினாலும் அல்லது அவை கிடைக்காமற் போனாலும் ஒரு நெருப்பு (Crisis) ஏற்படுவது சகசம்.

இச்சமயங்களில் போட்டி ஏற்பட்டு விலைவாசிகள் இறங்கி வியாபாரிகளுக்கு நட்டத்தை உண்டாக்கிப் பணமுடையை உண்டு பண்ணி விடக்கூடும். வட்டி வீதமும் உயரும். கடன் கிடைக்காமல் சில வியாபாரிகள் அழிப்பதுமுண்டு

14 சாதாரணமாகப் பண நெருக்கடி ஏற்படும் சமயங்களில் பண முடை ஆதாரக்குறைவு தொழிலாளிகளுக்குச் சலார் குறைவும் பண்டங்களின் விலைவாசிகள் உயருதல் முதலானவைகளைக் காணலாம்.

IV

இயற்கையே தொழிலை வகைப்படுத்தி இருக்கிறது. முதல் அத்தியாயம் 4-வது பிரிவு.

2 ஆண் பெண் என்பதே ஒரு வகை ஆகிறது.

கடினமான கவலைகளை ஆண்மகன் ஏற்றுக் கொள்ளுகிறான். லேசான வேலைகளைப் பெண்கள் ஏற்பார்கள்.

உதாரணமாக மண்வெட்டியைக் கொண்டு மண்ணை வெட்டுவதற்கு அதை அப்புறப்படுத்துவதும் இருவகை உழைப்பாகிறது.

3 உழைப்பின் பிரிவினால் உண்டாகும் நன்மை தீமைகளாவன:-

நன்மைகள்:-சிரமமான ஒரு வேலையைப் பலருக்குப் பிரித்துக் கொடுப்பதால் அந்த வேலை சுலபமாகவும் சீக்கிரமாகவும் செய்து முடிக்கப்படுகிறது. (2) ஒவ்வொரு பாகமும் திறமாகவும் செய்து முடிக்கப்படுகிறது.

தீமைகள்:- தொழிலாளி ஒருவித வேலையைச் செய்து வருவதால் அவனுக்குச் சலிப்பு உண்டாகக் கூடும். (2) வேறுவகை வேலைகளுக்குப் பாயக் கற்றவனுவன். (3) அவனுக்குத் தெரிந்த வகை வேலை கிடைக்காமற் போகுமாகில கட்டத்திற்குள்ளாவான.

4 மேல் விவரித்துள்ள தீமைகளை நிவர்த்தி செய்து கொள்ள மார்க்கம் ஒன்றுண்டு. அதாவது ஒருவகைத் தொழிலில் பயிற்சி பெற்றவன் அவ்வகைக் கொத்த வேறு பல மாதிரிகளான தொழிலில் அவனைப் பழக்குவது (2) வேலை நேரத்தைக் குறைத்து ஓய்வை கொடுத்தல். இவையே தக்க நிவர்த்தி மார்க்கங்களாகின்றன.

V

முன் அத்தியாயங்களில் மனிதனின் ஜீவியமுடைக்குத் தேவைப்படும் பண்டங்களின் உற்பத்தியும் அதைப்பொட்டிப் பல விசேட அம்சங்களும் விவரமாகக் கூறப்பட்டன.

இங்கு பண்டங்களின் உற்பத்தியின் அபிவிருத்திக்குக் காரணமான கைத்தொழிலைப் பற்றிக் கூறப்படும்.

2 முதன் முதலில் மனிதன் தன் குடும்பத்தவர்களின் ஜீவிய முடைகளைத் தீர்க்கப் பண்டங்களை உண்டாக்கி வந்தான், அதைத் தான் கைத்தொழிலென்று கருதியது.

சிலகாலஞ் சென்றதும் மற்ற முள்ளவர்களின் தேவைகளுக்கும் பண்டங்களைச் செய்ய அவசியமேற்பட்டது. அதனால் கைத்தொழில் ஒருபடி உயர்ந்தது. அதன்பின் பண்டங்களின் உற்பத்திக்கு வேண்டிய கருவிகளையும் தானே செய்து கொள்ள முயன்றான். அவைகளைக் கொண்டு முதலாளிகளும் வியாபாரிகளும் கொடுக்கும் இயற்கை வஸ்துக்களைக் கொண்டு பண்டங்களின் உற்பத்தி நடந்து வந்தது. பிறகு பண்டங்களின் உற்பத்திச் சாலைகளேற்பட்டுப் பெரும்படியாகச் சாமான்கள் உற்பத்தியாக்கப்பட்டு வருகின்றன.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழக தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் விஷு வரு
ஆடி மீ ௩0௨ வியாழக்கிழமை

## நாடு படும்பாடு

இப்பொழுது நடக்குங் கொடிய யுத்தந் தொடங்கி இரண்டு வருடம் வரையிலாகின்றது. இந்த யுத்தம் ஆரம்பத்தில் இங்குள்ள மக்களை அதிகந் தாக்குத லின்றி அயிரோப்பாக் கண்டத்திலேயே நடந்தது. ஆனல் காலகதியில் அங்கிருந்து இங்குவந்து இறக்குமதியாகும் பொருள்கள் வாராதொழிய, இங்குள்ள மக்களுக்குப் பொருட்பஞ்ச முண்டாயது; அப்படியாகியும் எங்கள் தாய்நாடாகிய இந்தியாவிலிருந்து, இங்குள்ள மக்களின் நித்திய வாழ்க்கைக்குரிய பண்டங்கள் பல வந்து இறக்குமதி செய்யப்படலாயின. இதனுற் பொருட்பஞ்சம் ஒரு அளவிற்கு இந்நாட்டிற் புலப்படாமல் இருந்ததெனலாம். ஆனல் இலங்கை அரசாங்க சபையில் உள்ள சிங்கள மந்திரிமார் செய்த அக்கிரமத்தின் பயனக, முன் எக்காலத்தேனும் எங்களைப் புறக்கணித் தறியா இந்திய மக்கள் இப்பொழுது எங்களைப் புறக்கணிக்கத் தலைப்பட்டனர். அதகாரணமாக நாங்கள் இந்திய மக்களைக் குறைகூற இடமில்லை; சிங்களர் இலங்கையிலுள்ள இந்தியர்களைப்புறக்கணிக்கத்தொடங்கிய போதில், பண்டிதர்நேருபோன்ற இந்தியப் பெரியார் இங்கு வந்து இருநாட்டினர்க்குமிடையிற் சமாதானம் ஆக்கிவிடத் தங்களால் இயன்றவரையில் முயன்றனர். அதற்கு, இங்குள்ள சிங்களர் "நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்" என்ற பான்மையாக, தமக்கும் எமக்கும் பின்னர் கேரவிருக்குங் கேட்டினை யிட்டுச் சிறிதுஞ் சிந்தியாதவர்களாய் உடன்படா தொழிந்தனர். அதனைக் கண்டு இந்திய தலைவர்கள் "இலங்கையருக்கு இந்தியரைத் தேவையல்லாமல், இந்தியருக்கு இலங்கையரைத் தேவையில்லை" என்று சொல்லி எச்சரித்தனர். அப்பொழுதும் "கெடுகுடி சொற்கேளாது" என்றவாறு, இங்குள்ளசிங்களர் அவர்கள் செய்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தினரல்லர்.

இந்தப் பிடிவாதமான செயலால் வந்த விளைவென்ன? இந்நாட்டு மக்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாப் பண்டங்களான அரிசிநெல், ஏனைய தானிய வகை, கறிக்குரிய வெஞ்சனம், சர்க்கரை, மருந்துச் சரக்குகள், புடைவை, தாமிர வெங்கல பித்தளைப் பாத்திரங்கள் முதலிய இன்றியமையாப் பொருள்கள் பலவற்றை இலங்கையில் இறக்குமதி செய்யும் விஷயத்தைக் கட்டுப்படுத்தத் தலைப்பட்டார்கள். காகிதப் பஞ்சமான காலத்திலே அங்கிருந்து இங்குக் காகிதத்தைத் தானும் தருவித்தல் முடியாம லிருக்கின்றது. இப்படி இந்தியாவிலிருந்து வரும் பொருள்கள் அரியனவாக, அவற்றின் விலையும் இங்கே முமடங்கு நான்மடங்கு அதிகப்படலாயிற்று. ஆனலும் யப்பானியருக்கும் பிருத்தானியருக்கும் இதுகாறும் மாறுபாடில்லாமையால் ஒரு அளவிற்கு யப்பானிய பொருள்கள் இந்நாட்டிற்கு வந்தபடியாற் பொருட்பஞ்சம் இந்நாட்டு மக்களுக்கு அதிகம் புலப்படா திருந்தது. ஆனல் இப்பொழுது எங்கள் பிருத்தானியருக்கும் யப்பானியருக்குமிடையே மாறுபாடு உண்டாய் விட, அந்நாட்டிலிருந்து இந்நாட்டிற்குப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படாதொழிய, சென்ற சில வாரங்களாக இங்கே எவ்வகையான பொருள்களுக்கும் நாங்கள் பஞ்சப்பட வேண்டி நேர்ந்து விட்டது. அயிரோப்பிய பொருள்கள் அறவே வாராதொழிய, இந்திய பொருள்கள் கட்டுப் படுத்தப்பட, யப்பான் பொருள்கள் தடுக்கப்பட, இந்நாட்டிலே பஞ்சம் வந்ததிலைப்பட, இந்த இலங்கை மக்களுள்ளும் தமிழ் மக்களாகிய நாங்கள் படும்பாடு சற்றல்லவே!

இந் நாட்டிலுள்ள சிலரிலுஞ் சிலர்க்கொழிய ஏனைய சனங்களுக் கெல்லாம்உணவைப் போதிய உணவில்லை; உடுக்கத் துணிக்கு வகையில்லை, வைக்கிற் பணமில்லை, பாடுபட்டாலும் பணத்தை யீட்டலாமோ என்ருல் எவ்வகையான உழைப்புக்கும் இடமில்லை; செய்வதென்ன? எங்கள் அரசினர் பகைவருடன் போர் புரிய, நாங்கள் பஞ்சத்துடன் சமர்புரிகின்றேம்! இங்குள்ள மக்கள் எவரைப் பார்த்தாலும் உலர்ந்த முகமும் சிந்தனையோடு கூடிய உள்ளமுமுடையராய் என்செய்வதென்ற பேச்சுமாகக் காணப்படுகின்ருர்கள்! மக்களுக்குப் பஞ்சத்தை விஞ்சிய பகையில்லையென்பர்;

"அறிந்தல் வலிபெற் றுள்ள
அவுணராம் பானுட் கங்குல்
விடிவதும், அமரர் தங்கள்
வெஞ்சிறை விடுமாறும்,
செடியதோல் வெறுக்கை தன்னை
நீங்கிய நமது துன்பம்
முடிவதுமில்லை சொல்லோ?
மொழிந்தருள் முதல்வ" என்ருன்.

என இந்திரன், சூரபன்மனுக்கும் சுப்பிரமணியப் பெருமானுக்கு மிடையே யுத்தம் நேர்ந்த போது, கவலையுடன் மகாவிஷ்ணு மூர்த்தியை வினவினனெனச் சொல்லப் பட்டிருக்கின்றது. அப்படியே நாங்களும், அந்த ஜர்மனியர் அயிரோப்பாக் கண்டத்தில் உள்ள ஏனைய பகையரசர், யப்பானியர் எப்பொழுது தோல்வி யுறுவர், கோரமான யுத்தம் எக்காலத்தில்முடியும், சமாதானம் எந்நாளில் உண்டாகும், தொன்மைபோல் நாங்கள் வாழுங் காலம் எப்போது வரும் என்று தெய்வத்தை இரக்க வேண்டிய நிலையில் இருக்கின்றேம்.

*

### "வடபகுதிப் பிரதிநிதிகளின் பராமுகம்"

சென்ற வாரம் யாழ்ப்பாணப் பட்டின சங்கங் கூடியபோது, பட்டினத்தின் வட்டாரப் பிரதிநிதிகளுள் ஒருவராகிய திரு. ச. பொன்னம்பலமவர்கள், யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் புதிதாகக் கட்டப்பட்ட பரிகரிப்புச் சாலைகளில் க்ஷயரோகம் முற்றிய நோயாளிகளை வைத்துப் பரிகரிக்க விடவோண்ணுதெனச் சுகாதாரப் பகுதிமந்திரிக்கு இச்சங்கத்தார் தெரிவிக்கவேண்டுமென்ற நிர்ணயத்தைப் பிரேரிக்குஞ் சமையத்திற் பின்வருமாறு பேசினர்:-

"எங்கள் அரசாங்கசபை வடபகுதிப் பிரதிநிதிகள் செய்யவேண்டிய ஒரு கடமையை இப்பொழுது இச்சங்க வட்டாரப் பிரதிநிதிகளாகிய நாங்கள் செய்ய வேண்டி ஏற்பட்டிருக்கிறது. எங்கள் வடபகுதிப் பிரதிநிதிகளை ஏதுங் கேட்டால் 50 சிங்களப் பிரதிநிதிகளுக்கு மாறுக நாங்கள் என்ன செய்ய முடியும்? வடமாகாண விஷயமாக ஏதும் முயற்சி செய்யப் புகின் சிங்களவர்கள் அதற்கு உடன்படுகிறுர்களில்லை'; யென்று "சாட்டு"ச் சொல்லுகிருர்கள். உண்மையப்படியல்ல, சிங்களர் தங்களுக்கள் அதிகாரத்தை வைத்துக் கொள்ள விரும்பினலும், வடமாகாணத்தின் நன்மையையிட்டு ஏதும் பணம் செலவிடும் விஷயத்தில அவர்கள் மாறுக விருக்கவில்லை. எங்கள் பிரதிநிதிகள் தான் இவ் விஷயத்தில் பராமுகமாயிருக்கின்ருர்கள். ஒரு கருமத்தை அதிகாரிகளைக் கொண்டு நிறைவேற்றுவிக்கவேண்டுமானல் பிரதிநிதிகளாயுள்ளவர்கள் அல்லும்பகலும் அதே சிந்தனையாக முயற்சி செய்ய வேண்டும்; அப்படித்தான் எங்கள் பழைய பிரதிநிதிகளாகிய ஸ்ரீமான். அ. சபாபதி யவர்கள் போன்ற பழையசனத்தலைவர்கள் அக்காலத்திற் கருமம் பார்த்து வந்தனர்"

## உலகம்பலவிதக்கதை

(முற்றொடர்)

### திருவண்ணுமலை

இராமனும் சகோதரிகள் இருவரும் சாமியம்மாளும் புகைரதமார்க்கமாகப் பல தலங்களுக்குச் சென்று சென்று ஆங்காங்குள்ள புண்ணிய தீர்த்தங்களிலே மூழ்கிச் சுவாமி தரிசனஞ் செய்து ஒவ்வொரு தலத்திலும் ஒருநாள் இருநாள் சிலநாள் தங்கித் தங்கியிருந்து சற்றில் திருவண்ணுமலையாகிய திவ்விய க்ஷேத்திரத்தை யடைந்தார்கள். "மக்காள், அதோ பாருங்கள், தூரத்திலே கண்ணுக்கு உன்னதமாகத் தோற்றப்படும் அதுதான் திருவண்ணுமலைத் தலம்" என்று சாமியம்மாள் சொல்ல, "ஆச்சி, நீங்கள் ஆச்சி சாமியைப் பற்றிச் சொன்ன தலம் இதுதானே" என்று அமிர்தாம்பிகை பயபக்தியுடன் கேட்க "ஓம், மகளே, இதுதான்" என்று சாமியம்மாள் பதில் கூறினள். அதனைக் கேட்ட அமிர்தாம்பிகையும் கந்தாம்பிகையும் சாமியம்மாளிடம் விபூதி வாங்கி நெற்றியிற் பூசிக் கொண்டு அருணசலேசுவரரைத் தியானித்துக் கொண்டு திருமலையை நோக்கிக் கும்பிட்டனர். திருவண்ணுமலையைச் சமீபிக்க அப்பெண்கள் இருவரிடத்திலும் அச்சம் அற்புதம் பக்தி என்னும் மிவைகள் ஏககாலத்திலே தோன்றின.

"மாடமொடு கோபுரமும் மன்னு மணி முத்தஞ்
சூடுமதி லும்பெரிய தோரண முகப்பும்
நீடுகமு காடவி நெருங்கியுள தண்கா
ஆடியர்தல் கண்டுவகை கொண்டு தொழு தய்ந்தார்."

என்றவாறு அத்தலத்தின் காட்சியைப் பார்த்த மாத்திரத்தே அப்பெண்களின் மனம் மகிழ்ச்சியடைந்தது; "அக்கா, நாங்கள் பாடல் படிப்பிற் படித்ததும் எங்களூரிலிருந்து யாத்திரையின் பொருட்டு ஆங்கே வந்து மீண்டவர்கள் சொல்லக் கேட்டதுமாகிய அண்ணமலையென்னும் புண்ணியதலம் இந்தத் தலந்தானே" என்று தமக்கையைத் தங்கை பயபக்தியோடு வினவினள். "ஓம், கண்ணே, ஏதோ முற்பிறப்பில் நாங்களும் புண்ணியஞ் செய்திருக்கவேண்டும்; இல்லாவிட்டால் இந்தக் காட்சி எங்களுக்குக் கிடைக்குமா! தங்காய், திருவாரூரிற் பிறந்தால் முத்தியென்றும், சிதம்பரத்தைத் தரிசித்தால் முத்தியென்றும், காசியில் இறந்தால் முத்தியென்றும் சொல்லுவார்கள்; ஆனல் இத் திருவண்ணுமலையை எவ்விடத்திருந்து நினைத்தாலும் மோட்சங் கைகூடுமாமே; அப்படிப்பட்ட புண்ணிய தலமல்லவா இது; அல்லாமலும் பிரம விஷ்ணுக்கள் முறையே முடியையும் அடியையுந் தேடிக் காணுதவராய்ச் சோதிப் பிழம்பாய முறைகாலத்திலே தோன்றிய திருமலையும் இதுதான்; இந்தச் க்ஷேத்திரத்தின மகிமை சொல்லி முடியாது........" என இப்படி அத்தலத்தின மகத்துவத்தை அம்ருதம் தன தங்கைக்கு எடுத்துச் சொன்னள். சாமியம்மாளுக்குத் திருவண்ணுமலைத் தலம் புதியதல்லவே; ஆதலால் அந்த அம்மாள் அவர்களையும் இராமனையும் தான் முதலிருந்த திருமடத்திற்கு அழைத்துக்கொண்டு போகாமல் ரமணரிஷியென்னும் மகான் இருக்கும் ஆசிரமத்திற்குச் சிறந்த தூரத்திலுள்ள இன்னெரு மடத்திற்கு அழைத்துச் சென்றுள். அந்தத் திருமடத்தில் சில தினங்கள் அவர்கள் வசதியாகத் தங்கியிருந்து சுவாமி தரிசனஞ் செய்து கொண்டு வந்தார்கள். பிள்ளைகளுக்கு அத்தலத்தில இன்னுஞ் சில காலந் தங்கியிருந்து சுவாமி தரிசனஞ் செய்வதற்கு இஷ்டமிருந்தது. ஆனல் சாமியம்மாளுக்கு அங்கே அதிக நாள் தங்கியிருக்கப் பிரியமில்லை. இதற்கிடையில் இராமன் ஒரு நாள் அப்பட்டினத்தைச் சுற்றிப் பார்க்கும்படி வெளியே சென்றிருந்தவன் மீண்டு வந்து "இங்கே கள்ளர் பயம் அதிகமென்று பேசிக் கொள்ளுகிருர்கள். ஆனபடியால் அதிகம் இங்கே நிற்பது புத்தியல்ல நாம் நாளைக்குப் புறப்பட்டு பண்டுபோவது புத்தி" என்ருன். "அப்படிச் செய்வது தானல்லது" என இராமன் சொன்னதைக் கேட்டுச் சாமியம்மாளும் பிள்ளைகளும் அதற்கு உடன்பட்டார்கள். அடுத்ததான மத்தியானத்திற்கு முன் புறப்படுவதென்று நிச்சயிக்கப்பட்டது. இப்படியிருக்கச் சுந்தராம்பிகை சாமியம்மாளைப் பார்த்து "ஆச்சி, நாளைக்கு இத்தலத்தை விட்டுப் புறப்படுகிறதென்று நிச்சயித்து விட்டோம்; இதற்கிடையில் "இன்று வெயில் தணிந்த பின் இந்தப் பட்டினத்தைச் சுற்றிப் பார்க்கலாமென்று நினைக்கிறேன்; உங்களுக்கு விருப்பமெனவோ" என்று ஆவலுடன் கேட்டாள்; சாமியம்மாள் "அதற்கென்ன மகளே, விருப்பமானல் அப்படிப் பார்க்கலாம்; உன் அக்காவுக்கும் பிரியந்தானே" என்ன "எனக்கும் பிரியந்தான்" என்று அமிர்தாம்பிகையுஞ் சம்மதித்தாள்.

### ஆபத்து!

பிற்பகலாதலும் பிள்ளைகளின் விருப்பத்தின்படி இராமன் ஒரு வண்டியை அங்கே வரச் செய்தான். அவ்வண்டியிற் சாமியம்மாளுஞ் சகோதரிகளும் ஏறிக்கொண்டு இராமனையும் அதில் ஏறியிருக்கும்படி அவர்கள்கேட்க,அவன் "வேண்டாம், நான் வண்டியின்பின் நடந்து வருகின்றேன்" என்று அப்படியே நடந்து செல்லலானுன்; பட்டினத்திலுள்ள பற்பல விசேஷங்களைச் சாமியம்மாள் காட்டக் காட்டப் பிள்ளைகள் வண்டியை நிற்கச் செய்து வண்டியிலிருந்தபடி பார்த்தும், சிற்சில இடங்களில் வண்டியிலிருந்து இறங்கிப் போய்ப் பார்த்தும் செல்லலாயினர். அவர்கள் அப்படிப் பார்த்துப் பார்த்து வருமபோதெல்லாம இராமன் வண்டியண்டையிற்றுன் நின்று கொள்வான்; மாலைக்காலமாதற்குச் சில மணி நேரமிருந்தபடியால், பட்டினத்திலுள்ள காட்சிகளை ஒருவாறு பார்த்துக் கொண்டு அப்பாற் கிராமத்திலுள்ள இயற்கைக் காட்சிகளையும் சகோதரிகள் இருவரும் பார்க்க விரும்பினர்கள்; சாமியம்மாளும் அதற்குச் சம்மதித்தாள்; வண்டிக்காரனுக்கு அவர்கள் தங்கள் நோக்கத்தைத் தெரிவிக்க, அவன் அயற்கிராமத்திற்குச் செல்லும் தெருவீதி மார்க்கமாக வண்டி செலுத்தலானுன்; வண்டிக்காரன் மாட்டைச் சிறிது வேகமாக ஓட்டினன்; பின் தொடர்ந்து வந்த இராமன் இருபக்கமும் பார்த்துக்கொண்டு தான நடந்தபடியே நடந்தான். அப்படி வந்தமையினுல் இராமன் சிறிது பிந்தி விட்டானெனினும் வண்டி வேகமாகச் செல்வதைக் கண்டு விரைந்து வந்தான்; பிள்ளைகள் வண்டியை வேகமாக ஓட்ட வேண்டாமென்று வண்டிக்காரனுக்குச் சொல்லும்படி சாமியம்மாளுக்குக் குறிப்பாகச் சைகை காட்ட, சாமியம்மாள் "வண்டி மெல்ல மெல்லப் போகட்டும் பின்னுக்கு வருகிற ஆளும் வரட்டும்" என்று வண்டிக்காரனுக்குச் சொன்னள்; வண்டிக்காரன் திரும்பிப் பார்த்து "ஆம், அம்மா, அவர் பின்னே வருகிருர்; அந்திக்காலமாதற்கு முந்தி நீங்கள் மடத்திற்குப்போகவேணுமல்லவா" என்று சொல்லிக் கொண்டு காற்சந்தியைக் கண்டமாத்திரத்தே, நேரே போன வண்டியை அச்சந்தியில் வேறொரு திசையை நோக்கித் திருப்பி வேகமாகச் செலுத்தினன். வண்டி திரும்பிய மாத்திரத்தே இராமன் அவர்களுடைய கண்ணுக்குப்புலப்படாதொழிய, பிள்ளைகள் இதில ஏதோ கிருத்திரமம் இருக்க வேண்டுமென்று பயந்து "வ, வண்டிக்காரா! வண்டியை நிறுத்து, இல்லாவிட்டால் எங்களை இறக்கிவிட்டு நீபோ" என்று ஆத்திரத்தோடும் அச்சத்தோடும் அதட்டிச் சொன்னர்கள். சாமியம்மாளும் அப்படியே சொன்னுள். ஆனல் வண்டிக்காரன் அவர்கள் தடுத்துச் சொல்வதை இம்மியத்தனையும் பொருட்படுத்தாமல், ஒன்றும் பேசாமல், மிக வேகமாகச் செலுத்தினன். மாடு ஓடத் தொடங்கியது; பிள்ளைகளால வண்டியில் இருக்கவும் முடியவில்லை, இறங்கவும் இயலவில்லை; பாவம்! என் செய்வார்கள்! பெண் பேதைகள்! "இராமண்ணு! இராமண்ணு! ஓடிவா!" என்று கதறினர்கள்; இதற்கிடையில் வேகமாகச் சென்ற வண்டி ஒரு மாச் செறிவை யடைந்தது; அந்த மாச்செறிவிலிருந்து இரண்டுபேர், அச் சத்தத்தைக் கேட்டுப் போலும், யாரடா! வண்டியை நிற்பாட்டு" என்று சொல்லிக் கொண்டு தெருவில் வந்து எதிரனர்கள்' அவர்களுள் ஒருவன் வண்டியைப் பிடிக்க, மற்றவன் மாட்டைப் பிடித்துஓடாது தடுத்தான்;"ஐயோ! அண்ணமாரே! இந்தப் பாதகன் எங்களைக் கொலை செய்யப் போகிருன்; பெண்பேதைகள்! எங்களை இரட்சியுங்கள்! எங்கள் ஆள் பின்னுலே வருகிறது; அவ்வளவு நேரமும் எங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்" என்று சாமியம்மாள் அங்கே வந்த இருவருக்கும் அழுதழுது முறையிட்டாள். பிள்ளைகளும் சிறிது அழுகை தணிந்திருந்தனர். ஆனல் ஏக்கம் மாறவில்லை, வண்டி நின்றவுடனே சாமியம்மாள் இறங்கப் பிள்ளைகளும் வண்டியிலிருந்து குதித்தனர்; அண்ணமாரே அந்தச் சந்தி வரையில் எங்களைக் கூட்டிக்கொண்டு போய்விடுங்கள், அப்பால் நாங்கள் போய்விடுவோம்" என்று சாமியம்மாள் அந்த இருவரையும் இரந்தாள்; அவர்கள் ஆம் என்று சொல்லிக் கொண்டு பின்னே பிள்ளைகளிருவரும் அணிந்திருக்கும் ஆபரணங்களையே உற்றுப் பார்த்தார்கள்; தோற்றத்தளவில் அந்த வண்டிக்காரனுக்கும் அவர்களுக்கும் அதிகம் வித்தியாசங் காணப்படவில்லை; "நீங்கள் பயப்பட வேண்டாம்; இவன் அப்படியொன்றுஞ் செய்யான; நம்மவனுஷன்தான்; நீங்கள் வண்டியில ஏறுங்கள், நாங்கள் உங்களைத் திருப்பிக்கொண்டு போய்ச் சந்தியில் விடுகிறேம்" என்ருன் முந்த வந்தவர்களுள் ஒருவன். இந்த வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தே சாமியம்மாளின நெஞ்சில் இடி விழுந்தது போலிருந்தது.

### உண்ணுமுலையாளே! உனக்கடைக்கலம்!

இதற்கிடையில் வண்டிக்காரனும் வண்டியையும் மாட்டையும் நிற்கவிட்டுத் தானும் அந்த இருவரோடும் வந்து சேர்ந்தான; "மக்காள்! முன்னே நடவுங்கள், என்று வீராவேசத்துடன் சொல்லிக் கொண்டு பிள்ளைகளை முந்தி நடக்கச் செய்து தானும் தொடர்ந்து நடந்தான்; அதனைக்கண்டு சோரர் மூவரும் பின் தொடர்ந்தார்கள், ஓடுங்கடி மக்காள! என்று சாமியம்மாள் சொல்ல, பிள்ளைகள் ஓட, பிறகே சாமியம்மாளும் ஓட, கள்ளரும், மூன்று மறிமானகளைத் தாக்கச் செல்லும் புலிபோன்ற போல அவர்களைத் தொடர்ந்தார்கள். பொல்லாத மறவருக்குத் தப்பி ஏழைப் பெண்கள் ஓட முடியுமா? ஆனலும் மானத்தையும் உயிரையுங் காக்கும்படி பெண்களும் தங்களால ஆனமட்டும் ஓடினர்கள். சோரர் தங்களைப் பிடிக்கப் போகிருர்கள் என்ற அச்சத்தினுல் "முந்தியும் என்னைக் காத்த உண்ணுமுலைத் தாயே, என் பிள்ளைகளும் நாமும் உனக்கடைக்கலம்" என்று சத்தமிட்டாள் சாமியம்மாள்; அவளுக்கு ஆவேசம் வந்துவிட்டது, ஓடின சாமியம்மாள், திரும்பினுள் யானை சத்தமிடுவது போற பெருஞ் சத்தமிட்டாள்; அவளுடையமுடித்து நிருத்த கூந்தல் குலைந்து விரிந்தது; கண்கள் சிவந்தன! பறகளைக் கெறுவென்னக் கடித்தாள்; செய்வாறின மாகப் போனும், தெருவருகிற கற்கள் குவிக்கப்பட்டிருந்தது. சாமியம்மாள் இட்ட உங்காரத் தொனியைக் கேட்ட மாத்திரத்தே மூர்க்கமாக வந்த கள்ளர் மூவரும் திடுக்குற்றுத் தம்பம்போல நின்று விட்டார்கள். "உண்ணுமுலையாள் நானடா! உதிரமாகாளிதானடா! உங்கள் உதிரங் குடிக்கிறேன் பாரடா? உடலைக் கறிக்கிறேன், ஆடா! உயிர்தப்பி ஓடிப்போமேடா!" என்று கத்திக் கொண்டு துள்ளிப்பாய்ந்து இரண்டு கைகளாலும் குவியலிலுள்ள கற்களை வாரி வாரி இடைவிடாமல் விசினுள். விசிய கற்கள அவர்கள முகத்தில் நெற்றியில் மூக்கில் கண்களில் படபடவென்று பாய்ப்பட்டன; கற்கள் பட்ட மாத்திரத்தே விரனெற்றியுடைந்தது; கழுப்பான கண்கள் சிதறின; முனியன் மூக்குச் சிதைந்தது. உதிரம் பெருகியது; கற்கள் படும அக்கோரம் பொறுக்கமாட்டாதவர்களாய்க் கள்வர் மூவரும புறங்கொடுத்தோடத் தலைப்பட்டார்கள்; ஆவேசங் கொண்ட அம்மாள் விட்டாளா? இல்லை! இல்லை!! கல்லை வாரி மன்னி முன்றுனையிற் கட்டிக் கொண்டு பின்னரும் இரு கை நிறைய அள்ளிக் கொண்டு ஊரத்தித் தாதது பெற்றாள். "ஆச்சி! எங்களை விட்டுப் போகாதீர்கள், பயமாயிருக்குது" என்று கதறினர்கள் பிள்ளைகள். "பயப்பட வேண்டாம்! என் மக்காள, பருகுவேன் பாதகர் உதிரத்தை" என்று சொல்லிக் கொண்டு அந்த அம்மாள், திருடர்கள் ஓட, ஓடத் தொடர்ந்து கல்லாலவர்கள் மேற் கற்களை விசினுள்.

(வரும்)

### கவி ரவீந்திரநாத் தாகூர்

#### சிவாநந்த வித்தியாலயத்தில் அனுதாபக்கூட்டம்

கவிராசர், பாரதத்தாய் ஈன்றெடுத்த அருந்தவப்புலவர் டாக்டர் ரவிந்திரநாத தாகூர் அவர்களது மரணம்குறித்து அனுதாபம் காட்டும்பொருட்டு மட்டக்களப்பு சிவாநந்தவித்தியாலய மண்டபத்தில், வித்தியாலய ஆசிரியர்களும் மாணவர்களுமடங்கிய ஓர்விசேஷப் பொதுக் கூட்டம் 11-8-41 திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில், பேராசிரியர் திரு S. அம்பலவாணர் B. Sc அவர்களது தலைமையில் கூடிற்று. அவ்வமயம் ஆசிரியர்கள் திரு V. நல்லையா, B. A. அவர்களும் திரு க. கணபதிப்பிள்ளை F. R. G. S. அவர்களும் ஆங்கிலத்திலும் தமிழிலும் முறையே கவியரசரின் வாழ்க்கை ஆற்றிய அரும் பெருந் தொண்டு களைப்பற்றிப் பேசினர்கள். ஈற்றில் அனுதாபத்தீர்மானம் நிறைவேறப்பட்டு அவை கவியரசரின் புதல்வர் ஸ்ரீயுத் ரதீந்திரநாத் தாகூரவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. (நிருபர்)

### திருநெல்வேலிஐக்கிய கைத்தொழிற் சங்கம், யாழ்ப்பாணம்

மேற்படி சங்கத்தின் முதலாவது வருடாந்தப் பொதுக் கூட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை வேலைத்தல மண்டபத்தில சங்கத் தலைவரின் தலைமையிற் கூடியது.

மேற்பார்வை இன்ஸ்பெக்டர்களும் மேற்படி சங்கத்தின் அபிவிருத்தி கருதி உழைப்போரிற் சிலரும கூட்டத்திற்குச் சமூகமளித்திருந்தனர். இன்ஸ்பெக்டர் மிஸ்டர் R. C S. குக தமது அறிக்கையையும் 30-6-41 முடியவுள்ள சென்ற வருடக் கணக்குப் பத்திரத்தையும சமர்ப்பித்துக் குறிப்பிட்டதாவது:

"சென்ற ஒரு வருட காலமாகச் சபைப் பிரயோசனமான வேலைசெய்து வந்திருக்கிறது. குறித்த வருடத்துக்குள் 65 ஓடர்கள சபைக்குக் கிடைத்தன. இவை மொத்தம் 2677 ரூபாவுக்குச் செய்யப்பட்ட ஓடர்களாகும். இவற்றில முறைத் தவிர மற்றெல்லாம சபையால அந்த மாதத்திற்குள்ளேயே செய்து கொடுக்கப்பட்டது. சபை நியாயமான லாபத்தில நடக்கக் கூடியதாக மதிப்பு விலை போட்டுக் கொடுத்த வேலைப்பகுதி மனேஜர் ஒருவரைச் சபை நியமித்தல் நல்லது. கணக்குப் பத்திரப்படி அவரமாக ரூ 209 சதம் 06 லாபமும சுத்தமாக லாபம் 73 ரூபாவும் கிடைத்திருப்பதாகத் தெரிகிறது.

அங்கத்தவர்கள் இன்னும் அதிகசிரத்தை எடுத்து இக்கைத்தொழிலாளரின் பொருள்களை நீ மனிக்கைக்க வேலை செய்ய வேண்டும் சபையை ஒரு பலமான நிலையில் நிறுவுவதற்கு முயலுதல் வேண்டும்.

அதன்பின் சகக முன்னேற்றம் கருதி உழைப்பவர்களில் ஒருவரான திரு. V. S. கனகையா பேசியதாவது:—

"காலி ஐக்கிய வங்கிச் சங்கத்தின் 2ம் வருடாந்தக் கூட்டத்திற பேசும் போது, ஐக்கியசங்கப் பகுதியை ஒரு தேசியப் பகுதியாகக் கருதி உழைக்க வேண்டு மென்ற விவசாயமந்திரி திரு. D. S சேனநாயக குறிப்பிட்டார். அந்தச் சபையாருக்கு அர்ப்பணஞ் செய்ய விரும்புகிறேன். 1933ம் ஆண்டு தொடக்கம் ஐக்கிய சங்கப்பகுதியோடு எனக்குப் பழக்கமுண்டு, அப்பகுதி பொது சனங்களின் நிலையை முன்னேற்றமடையச் செய்வதற்காக உழைத்து வருகின்றதென்பதைக் கண்டேன். இப்பகுதியாருக்கு வார நாட்களுக்கும் ஞாயிறுக் கிழமைக்கும் வேற்றுமை இல்லை. எல்லா நாட்களையும் அவர்கள் ஒரே விதமாகப் பாவித்து உழைத்து வர வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

எந்தக் குடும்பத்திலும் நிகழ்வது போல உத்தியோகஸ்தர்களுக்கும் பொதுஜனங்களுக்குமிடையே வித்தியாசம் இடையிடையே ஏற்படுவது சகசமே ஆயின், இவையெல்லாம ஈற்றில இப்பகுதியில சந்தோஷகரமான முடிவையே அடைகின்றன. பொதுஜனங்களுக்கு நல்ல வழியைச் செய்யும மற்றோர் அரசாங்கப்பகுதியும உண்டு. அது கைத்தொழிற் பகுதியாகும். 9 மாகாணங்களிலும் 14 கிராமப் புனருத்தாரண சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. வடமாகாணத்தில இப்பகுதி சிறப்புள்ள மதத்யகதலம புகழாரி இருக்கின்றது. பலர் இதை அறியாமலிருக்கலாம். இது பெரியபயன் விளைக்கும் வேலைகளைச் செய்து வருகின்றது. இப்பகுதி உத்தியோகஸ்தரை இவ்வருஷம் வண்ணுர்பண்ணையிலும் மாவிட்டபுரத்திலும் நிகழ்ந்தப் பெற்ற இரு கூட்டங்களிற் சந்தித்தேன். பொது சனங்களின நிலைமையைத் திருத்துதற்காக அரசாங்கத்தார் எவ்வளவு ஆவலுடையவர்களாக இருக்கின்ருர்களென்பதையும் கொடிய வறுமையைப் போக்குவதில் அரசாங்கம் அளித்துள்ள சந்தர்ப்பத்தை அனைவரும் உபயோகித்துக்கொள்ள முன்வரவேண்டுமென்பதையும் அவர் எனக்கு எடுத்துக் கூறினர். ஜனங்கள் விழித்தெழுந்து இந்தக் கிராமப் புனருத்தாரண ஸ்தலங்களோடு நெருங்கிப் பழகுதல் வேண்டும். உத்தியோகஸ்தரது ஆலோசனையைக் கேட்டு ஒழுகுதல் வேண்டும்.

இந்தச் சங்கம் சென்றவருஷம் மிகப் பிரயோசனமான வேலைகளைச் செய்து வந்திருப்பது கண்டு மகிழ்ச்சியடைகின்றேன. இதுபோன்ற சங்கங்களை இன்னும் யாழ்ப்பாணத்தில் ஏனைய பாகங்களிலும் நிறுவ நாம் முயலுவோம்.

இந்தச் சங்கத்திற்கு ஒரு மாக்கானையும் அரியும் யந்திரமும் அவசியம் வேண்டும். அவை கிடைத்தால் இச்சங்கத்தின் முன்னேற்றத்துக்குப் பல்தடைகள் ஏற்படும். அங்கத்தவர்கள் இதற சேர்ந்தடைய பெருக்க்கொள்ளுதல் வேண்டும், மற்ற அங்கத்தவர்களையும் இச் சங்கத்தில சேர்க்கமுடிக்கச் செய்தல் வேண்டும்.

இதன்பின் அங்கத்தவர்களின் சம்பளங்களைக் குறிப்பது சம்பந்தமாகவும் கடனில் எஞ்சிய பகுதியையும் திருத்தவாறு அரசாங்கத்தை வேண்டிக்கொள்வது சம்பந்தமாகவும் இரு தீர்மானங்கள் நிறைவேறின. அதன்பின் புதிய உத்தியோகஸ்தர்கள் தெரிவு நடைபெற்றது.

ஈற்றில் தேவாரபாராயணத்தோடு கூட்டம் இனிது நிறைவேறியது.

திரு. A. J. காசிப்பிள்ளை, பண்டிதர் R. S. கனகையா ஆகியோரும் பேசினர்.

### கரையூரில் திருட்டு

#### 7ம் முறை குற்றவாளியெனக் காணப்பட்டவனுக்கு 2 வருடச் சிறைத்தண்டனை

(சமதநிருபர்)

கொழும்புத்துறையில வசிக்கும் சந்தியோ—சிலவியப்ப என்பவன் முன்னர் எழுமுறை குற்றஞ்சாட்டப்பட்டுத் தண்டனை அடைந்தவன். அவற்றுள் 6 முறை களவெடுத்த குற்றச்சாட்டில் தண்டிக்கப்பட்டவன். இவன் சென்ற 5-8-41ந் தேதி கரையூரில வசிக்கும் பற்றிக் துரைசிங்கத்தின் அலுமாரியிலிருந்து துணிகளைக் களவாடிச் சென்றதாக யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் நீதிபதி திரு. R. R நல்லையா முன்னிலையிற் குற்றஞ்சாட்டப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டான். நீதிபதி எதிரிக்கு 2 வருடக் கடுமியமற்ற தண்டனையும் இரண்டு வருடப் பொலிஸ் காவல் தண்டனையும் விதித்தார்.

### கொலை வழக்கில் எதிரியை விளக்க மறியலில் வைக்கமறு

#### நீதிபதியால் மறுக்கப்பட்டது

12-8-41

மல்லாகம் கோட்டிற் கொலை செய்ய எத்தனித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட (22395 ம் இலக்க வழக்கில்) எதிரி பிணையில் விடப்பட்டிருந்தான். இவ்வெதிரி வழக்காளிபக்கத்துச் சாக்ஷியாகிய A. சபாபதியென்பவரைப் பிணையில்நின்ற போது வெட்டிக்காயப்படுத்தியதால் உதவிச் சப்பிறிண்டேண்டன் இந்த எதிரியை விளக்கமறியலில் வைத்திருக்கவேண்டுமென்று நீதியரசர் மிஸ்டர் நிசிலிடம் ஒரு மனுவைக் கொண்டு வந்தார். இதனை மறுத்துத் திரு. G. G. பொன்னம்பலம் நீண்டநேரம் வாதித்தார். ஈற்றில நீதியரசர் எதிரியை விளக்கமறியலில் வைப்பதற்கு மறுத்து உத்தரவிட்டார்.

### "நீ ஒருநேர்மையான வாலிபன்"

கண்டிச் சுப்பிறீம் கோட்டு விசாரணையில், சென்ற வாரம் தான் கோரமாகப் பெற்ற சிசுவை உடனே வதைசெய்து மறைத்தாள் என்னுங் குற்றச்சாட்டின பேரில சில்வதி யென்னும் பெண் விசாரணை செய்யப்பட்டாள். அச்சமையத்தில புஞ்சிவண்டா என்னும் பெயருடையவன் அடுத்த வீட்டு வேலைக்காரனுக உள்ளவன் சாட்சியஞ் சொல்லும் போது, தனக்கும் அந்தக் கன்னிகைக்குமிடையே கூட்டுறவு உண்டென்றும், தான் அவளை விவாகஞ் செய்வதாக ஏற்றுக்கொண்டாரென்றும், ஆனல தான வேலைக்காரன் என்ற காரணம பற்றி அந்த ஆளம் பெண்ணின் பெற்றேர் அதற்குச் சம்மதிக்கவில்லையென்றும், ஆனல அந்த சிசுவைதனைப பற்றித் தனக்கொன்றும் தெரியாதென்றும் சொன்னன். நீதியரசர் 50 ரூபா வில ஒருவருடகால நன்னடத்தைப் பிணையென அப்பெண்ணுக்குத்தீர்ப்புச் செய்தார், பிணையெடுப்பதற்குப் பெற்ருேர் வந்திருக்கிருர்களோ என்று வினவியபோது அவர்கள ஒருவரும வந்திருக்கக் காணப்படலர்; பெற்றேராயுள்ளவர்கள் பிள்ளைகளை இப்படிப் பராமுகமாக விடக்கூடாதென நீதியரசர் கூறினர்; இதற்கிடையிற் குறித்த புஞ்சிபண்டா என்னும் வாலிபன் நான பிணையெடுக்கிறேன் என்று 50 ரூபா கட்டி, தான் அப்பெண்ணை விவாகஞ் செய்வதாக வாக்குறுதி யெழுதிக் கொடுத்தான். அதனைப் பார்த்த நீதிபதி நீ உள்ளதைச் சொல்லி அப்பெண்ணையும் ஏற்றுக் கொண்டாய்; ஆனதால் நீ ஒரு நேர்மையான வாலிபன்" என்று பாராட்டினராம்.

# இயன்றவரை நன்மைபெற முயலுவேன்

## முடியாவிடின் வெளியே வரத் தயங்கேன்

### ஸ்ரீமாந். ஆனே வாக்காளர்களுக்கு விடுத்தசெய்தி

அமராவதி ஆக 9

அமராவதி வாசிகள் இன்றுமாலை வைஸ்ராய் நிருவாகசபைக்கு நியமிக்கப்பட்ட ஸ்ரீமான் ஆனேயுக்கு ஒரு உபசாரம் நடத்தினார்கள். ஸ்ரீமான், பி. ஜி. கபர்டே தலைமை வகித்தார். அந்த உபசரிப்புக் கூட்டத்தில் ஸ்ரீமான் ஆனே பேசியதாவது:—

வைஸ்ராய் நிருவாகசபையை விஸ்தரித்ததால் விசேஷ நன்மை விளைந்து விடுமென நான் பெரு நம்பிக்கை கொள்ளவில்லை. ஆனாலும் தற்போது செய்துள்ள ஏற்பாடு அபிவிருத்திக்கான வழியெனச் சொல்வதில் ஆக்ஷேபமில்லை. ஆகவே அதை அடியோடு நிராகரிக்க கூடாது.

இந்த வைபவத்தில் கலந்து கொள்ள உண்மையில் எனக்கு விருப்பமில்லை, எனினும்மத்திய சட்டசபைக்குச் சென்ற 16 வருஷ காலமாக என்னைத் தொடர்ந்து அனுப்பிவருகிற வாக்காளர்களுக்கு நான் நன்றி கூறி விடைபெற்றுக் கொள்ள வேண்டு மென்பதற்காகவே இந்த கூட்டத்துக்கு வந்தேன். வைஸ்ராயின் பெரிய சபை ஆதரவற்ற இந்தியா சட்டசபைக்கு என்னை நீங்கள் அனுப்பினீர்கள். அங்கு உங்கள் சார்பாக நான் எடுத்துச் சொல்லும் யோசனைகள் அனைத்தையும் வைஸ்ராய் ஏற்றுக் கொள்வார் என்ற நியதி இல்லை. அவ்விதமே இப்போது வைஸ்ராய் நிருவாகசபை என்ற சிறியசபைக்கு என்னை நியமித்திருக்கிறார்கள். இங்கும் அந்த நியதி தான். அப்படி யாதல் எதுவும் இல்லாத முறையில் நீங்கள் ஏன் எனக்கு இப்போது ஆதரவு அளிக்கக்கூடாது. [illegible] கடமையில் எவ்வளவு நன்மையை நாட்டுக்கு வாங்கிக் கொடுக்க முடியுமோ அவ்வளவு நன்மையையும் பெற நான் முயலுவேன். அந்தப் பரீக்ஷையைச்செய்து பார்க்க எனக்கு இப்போதிய அவகாசம் அளியுங்கள். எனது முயற்சி பலிக்காதென்று தெரிந்ததும் நான் அங்கு வேற்றுக்கொண்டு ஒரு நிமிஷமும் தாமதியாமல் உங்களிடம் திரும்பி வந்து விஷயங்களைத் தெளிவாக விளக்கி விடுவேன்.

### சீக்கியர்கள் குறை

லாகூர் ஆக 9—

பஞ்சாப் சட்டசபையில் உள்ள [illegible] தேசியக் கட்சியினர் காலேஜ் கமிஷனுக்கும் அகில கட்சி சீக்கிய மகாநாடு விஷயமாக எவ்விதம் நடந்து கொள்வதென்பதை நிர்ணயிக்க இன்று ஒருகூட்டம் கூடினர். அக்கூட்டத்தில் கனம் ஸர். சிக்கந்தர் ஹயத்கான் பேசினார். மற்ற மந்திரிகளும் இக்கூட்டத்துக்கு வந்திருந்தனர். காலேஜ் சீக்கியமந்திரி உட்பட காலஸா தேசியக் கட்சியினர் அனைவரும் மகாநாட்டுக்குப் போக வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. காலேஜ் மகாநாட்டுக்குப் பிறகு [illegible] கட்சியினர் ஒரு அறிக்கை வெளியிடுவார்கள்.

காலஸா தேசியக் கட்சித் தலைவர் சர்தார் பகதூர் உஜ்ஜல்சிங் புறு மகாநாட்டில் ஸர். சிக்கந்தரை சந்தித்துப் பேசியது சம்பந்தமாக ஏற்பட்ட தகராறினால் ராஜினாமா செய்துவிட்டார். காலேஜ் ஸர். சிக்கந்தர் தமது முன்னிலையில் கணபர்களைக் கண்டு பேசுவார். இன்று சீக்கியத் தலைவர்கள் 25 பேர் ஒன்று கூடி காலேஜ் மகாநாட்டில் கொண்டுவர வேண்டிய தீர்மானத்தைத் தயாரித்திருக்கின்றனர்.

## இந்திய யுத்த முயற்சியின் சரித்திரம்

### எழுதுவதற்கு ஓர் ஆசிரியர் நியமனம்

சிம்லா ஆக 9

இந்தியாவின் யுத்த முயற்சியைப் பற்றிய சரித்திரத்தை எழுதுவதற்குத் திரு. ஜி. மாகவெர்த் யத் என்பவர் உத்தியோக முறையில் நியமிக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது. இந்தியப் பாதுகாப்பு இலாகாவில் அவருக்கு ஒரு விசேஷ உத்தியோகம் அளிக்கப்பட்டிருக்கும் விபரம் இந்திய அரசாங்கக் கசெற்றில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## கதிர்காம மகோற்சவத்தில் நடந்த அற்புதம்

வியாழக்கிழமையோடு (7-8-41) கதிர்காம ஆடி மகோற்சவம் நிறைவேறியது. அதற்கு முதனாகிய புதன்கிழமை இரவு கதிர்காம க்ஷேத்திரத்தின் உட்பிரகாரத்தில் ஒரு அற்புதம் நடந்ததாகச் சொல்லப்படுகின்றது. தீக்குளிப்பதற்காக 20 அடி நீளமும் 6 அடி அகலமுங் கொண்ட கிடங்கு தோண்டி அதன்கண் நிறைய விறகடுக்கி நெருப்புமூட்டப்பட்டது. நெருப்பு மூண்டு பற்றியெரிந்து தணலாகும்வரையும் சனங்கள் சனகுபக்கமும் சூழ்ந்து தீக்குளிக்குங்காட்சியைக் காண்பதற்குச் சமயம் பார்த்த வண்ணம் நின்றார்கள். நெருப்புக்குச் சமீபமாகச் செல்லவொட்டாது சுற்றுப்புறமும் தனித்தனி 25 அடி தூரத்தில் நிற்கும்படி பொலிசார் சனங்களை ஒதுக்கி நிற்கச் செய்துகொண்டு நின்றார்கள். இதற்கிடையில்திருக் கோயிற்பக்கமாகக் காவியுடை தரித்த ஒரு சந்நியாசி புறப்பட்டு வந்து சிறிதும் அச்சமின்றி அந்த எரிந்துகொண்டிருக்கும் நெருப்புக்கூடாக நடந்து அப்புறத்திற் போனவுடனே மறைந்து விட்டாராம். கதிர்காமத்தையனுடைய திருவிளையாடலென்று அங்கு அச்சமயத்தில் நின்றவர்களெல்லாரும் அற்புதமும் ஆனந்தமுமடைந்தார்களாம்; அச்சமயத்தில் அவ்விடத்தில் இல்லாதவர்கள் இக்கலியுகத்தில் காண்டற்கரிய திருக்காட்சியைக் காணப் பாக்கியம்பெறவில்லையே யென்று கவலைப்பட்டார்களாம். இந்த அற்புதத் திருவிளையாடல் நடந்த அரைமணி நேரஞ் சென்றபின்பே இருபது அடியவர்கள் வழக்கம்போல மாணிக்க கங்கையில் மூழ்கிவந்து தீக்குளித்தலாகிய செயற்கருஞ் செயலை எவ்வகையான இடையூறுமின்றிப்பக்தி வைராக்கியத்தோடு செய்து முடித்தனராம்.

[இந்த அற்புத சமாசாரம் கொழும்பிலிருந்து வெளிவரும் அப்லேவர் முதலிய தினசரிப் பத்திரிகைகளிற் காணப்பட்டது. அவ்வளவில் அமையாது கதிர்காம யாத்திரை சென்று மீண்டவருட் சிலர் தாம் இப் பேரற்புதத்தை நேரிற் கண்டதாக எமக்குப் பயபக்தியோடு சொல்லக் கேட்டுக் கதிர்காம வேலர் திருவிளையாட்டை நினைந்து நினைந்து அற்புதமடைபவரானோம். ஐயன் திருவிளையாடலை அறிபவல்லார் பார்.]

## வெலிசறையிற் பெரிய ஆஸ்பத்திரி

### ஏகாதிபத்திய நிதிகளைக் கொண்டு கட்டிட விஸ்தரிப்பு

#### நவீனவசதிகள் பல அமைக்கப் பட்டிருக்கும்

வெலிசறையில் க்ஷயரோக ஆஸ்பத்திரிக்காக கட்டப்பட்டுத் தற்காலிக யுத்தக்கைதிகள் முகாமாக உபயோகிப்பதற்கு அரசாங்கத்தாரால் எடுத்துக் கொள்ளப்பட்ட கட்டடங்கள் சகல தளபாடங்களும் அமைக்கப்பட்ட ஒரு பெரிய ஆஸ்பத்திரியாக மாற்றப்பட்டு வைத்திய சுகாதாரப் பகுதியுடன் திருப்பிக் கொடுக்கப்படுமென்று தெரிகிறது. இதற்கு வேண்டிய செலவுத்தொகை ஏகாதிபத்திய நிதிகளிலிருந்து எடுக்கப்படலாமென்று தெரிகிறது.

இப்பொழுதுள்ள கட்டிடங்களைத்தவிரப் பலபுதிய நிரந்தரமான கட்டிடங்களையும் சில தற்காலிக வார்டுகளையும் நிறுவத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

நவீன சத்திரசிகிச்சை ஸ்தலங்களும் எக்ஸ்ரே அறைகளுங்கூட இதிற் சேர்க்கப்பட விருக்கின்றன. இப்போதுள்ள கட்டிடங்கள் ஐக்கிய ஜோர்ஜ்மன்னர் ஞாபகார்த்த நிதிக்கு வருவான பணத்திலிருந்து க்ஷயரோகப் பிரசார விஸ்தரிப்புக்காகக் கட்டப்பட்டன.

இப்பொழுதும் இந்த ஆஸ்பத்திரியின் வேலைகளை அதிகப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கின்றது.

## வேல்விழா இரவிற் சூதாடிய 30 பேர்

### அபராதம் விதிக்கப்பட்டனர்

சப்-இன்ஸ்பெக்டர் இரத்தினம் 14 கொன்ஸ்டபிள்களுடன் நடத்திய ஒரு பரிசோதனையின் விளைவாக, சென்ற திங்கட்கிழமை பன்றி கொழும்பு பொலிஸ் நீதிபதி முன்னிலையில் 30 பேர் குற்றஞ் சாட்டிக்கொண்டுவரப்பட்டனர்.

எதிரிகளனைவரும் "பேஜ்" என்னும் சீட்டாட்டத்தைப் பந்தயப் பணம் வைத்து விளையாடியதற்குக் குற்றவாளிகளென்று ஒப்புக்கொண்டனர்.

கும்பனித்தெரு சர்ச்விதியைச் சேர்ந்த 43-ம் 41-ம் இலக்க லைதலங்களைப் பொலிசார் ஒரு வாரண்டைக்கொண்டு ஆகஸ்ட் மாதம் 7ந் திகதி இரவு 9-45 மணிக்குப் பரிசோதனையிட்டு எதிரிகளைக் கைது செய்தனர்.

வேல்விழாவின் ஆரம்ப இரவில் தான் இது நடைபெற்றதென்று எதிரிபக்க வழக்கறிஞர் தெரிவித்தார்.

முதல் எதிரி ஏற்கெனவே இருமுறை குற்றச்சாட்டுப் பெற்றிருப்பதாக ஒப்புக்கொண்டார். அவருக்கு ரூபாய் 20 அபராதம் விதிக்கப்பட்டது,

ஏற்கெனவே ஒருமுறை குற்றச்சாட்டுப்பெற்றிருந்த இரண்டாவது எதிரி ரூபா 15 அபராதம் விதிக்கப்பட்டார். வேறுநான்கு வாலிப எதிரிகளுக்குத் தனித்தனி இரண்டரைரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. ஏனைய 24 எதிரிகளும் தனித்தனி ஏழரை ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டனர்.

## சரித்திரசம்பந்தமான சொற் பொழிவுகள்

### பொருட்காட்சிச் சாலை அதிகாரிகளுக்குயோசனை

சென்ற சனிக்கிழமை கொழும்புப் பொருட்காட்சிச்சாலை மண்டபத்தில் "சிகிரியாவும் பொலன்னறுவைச் சுவர்ச் சித்திரங்களும்" என்னும் விஷயம்பற்றித் திரு. எச்.எல். கல்தேரா சொற்பொழிவு நிகழ்த்தினார். பொருட்காட்சிச்சாலை டைரெக்டர் திரு. பி. இ. பி. தெரனியகலை கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

இந்தச் சொற்பொழிவின் பின்னர் நடந்த விவாதத்திற் பாடசாலை ஆசிரியருக்கு உபயோகமுள்ள சரித்திர சம்பந்தமான விஷயங்களைப் பற்றித் தொடர்ச்சியான சொற்பொழிவுகளுக்கு ஒழுங்கு செய்யும்படி கோரப்பட்டது. வேறு தேசங்களிலுள்ள பொருட்காட்சிச் சாலைகளில் அதிகாரிகள் இதுபோன்ற பிரசங்கங்களுக்கு ஒழுங்கு செய்திருக்கின்றன வென்று கூறப்பட்டது.

## கண்டியிற் கடைசிநாட் பெரஹரா

### 77 யானைகள் கலந்து கொண்ட கவின்பெறு காட்சி

கண்டி, ஆக, 9௳

நேற்றிரவு நடைபெற்ற கடைசிநாள் பெரஹராவைப் பார்ப்பதற்காக வீதிஓரங்களிலுள்ள நடைபாதைகளிலும் வீடுகளின் தாழ்வாரங்களிலும் மாடிகளிலும் ஜன்னல்களிலும் திரளான ஜனங்கள் கூடியிருந்தனர். ஊர்வலத்தோடு வாத்தியக்கச்சேரிகளும் நாட்டியங்களும் மிகவிமரிசையாக நடைபெற்றன. இவ்வூர்வலத்தில் 77 யானைகள் கலந்துகொண்டன.

இன்று தீர்த்தோற்சவம் முடிவுற்றதும் மழை அறியது.

நகரிற் பெரிய விபத்துக்கள் எதும் ஏற்படவில்லை. நகருக்கு வெளியே சம்பவித்த ஒருதெருவிபத்தின் விளைவாக ஐவர் காயங்களோடு ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டனர்.

எங்கள் சிங்கம் கார்ச்சிக்கிறது என்னும் களியாட்டத்தை ஒழுங்கு செய்தவர்கள் எதிர்பார்த்ததற்கு அதிகமாகவே நேற்றிரவு வருவல் கிடைத்தது. களியாட்ட மைதான வாயிலில் 45,000 பிரவேசச் சீட்டுகள் விற்கப்பட்டன. இதுவரை இலங்கையில் நடைபெற்ற களியாட்டங்களில் இதுபோன்ற

## இந்தியர்-இலங்கையர் உறவு

### ஸ்ரீ. வி. எல். படேலின் சிரத்தை

#### இந்திய அரசாங்கத்துக்கு வற்புறுத்த ப

சென்னை, ஆக 8

வெளிநாட்டு இந்தியர் மத்திய சங்கத்தின் கௌரவ காரியதரிசியான ஸ்ரீ. வி. எல். படேல் இன்று பத்திரிகை நிருபருக்கு அளித்த பேட்டியில் இலங்கை அரசாங்கத்தோடு சம்பாஷணை நடத்துவதற்காக உத்தியோக சம்பந்தமற்ற தூதுக்கோஷ்டியையே அனுப்ப வேண்டுமென்று இந்திய அரசாங்கத்துக்கு வற்புறுத்தியிருக்கிறார்.

#### இந்தியர்-இலங்கையர் உறவிற் சிரத்தை

அவர் மேலும் கூறியதாவது:- "இலங்கையிலுள்ள இந்தியரின் நிலைமையைப்பற்றி அறிவதற்காக விரைவில் நான் இலங்கைக்குப் போகப்போகிறேன். சிங்களவருக்கும் இலங்கையிலுள்ள இந்தியருக்குமிடையே நல்லெண்ணம் உண்டுபண்ணும் வேலையிலும் நான் சிரத்தை செலுத்துவேன். எந்நாட்டிலும் இந்தியருக்குத் தனி உரிமைகள் வேண்டியதில்லை. இலங்கைக்குத் தூதுக்கோஷ்டியை அனுப்ப இது தகுந்த சமயமல்ல. இந்தியா-பர்மா ஒப்பந்தம் தக்கபடி திருத்தப்பட்டதற்குப்பிறகுதான் அனுப்பவேண்டும்.

#### இந்தியா-பர்மா ஒப்பந்த விஷயத்தில் தவறு

இலங்கை அரசாங்கத்தோடு சம்பாஷணையைத் தொடங்குமபோது இந்தியா-பர்மா ஒப்பந்தம் சம்பந்தமாக உத்தியோக சம்பந்தமற்றவர்களைத் தூதுக்கோஷ்டியிற் சேர்த்துக் கொள்ளாததால் ஏற்பட்டுள்ள நிலைமையை மனதிற் கொள்ள வேண்டிய தவசியம். இலங்கை விஷயத்திலும் அந்த தவறை இழைக்கக்கூடாது.

இந்தியா பர்மா ஒப்பந்தம் சம்பந்தமாக இந்திய அரசாங்கத்தின் மீது மாத்திரம் பழியைச் சுமத்துவது கூடாது. பர்மாவில் நலன்களையுடைய இந்தியரும் சிரத்தா குடியேற்ற நிர்வாகசபையினரை அணுகித் தகுந்தவாறு முயற்சிகள் செய்திருக்க வேண்டும். ஒப்பந்தத்தால் ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் விஷயத்தில் வெளிநாட்டு இந்தியர் மத்திய சங்கம் கவனஞ் செலுத்தித் தக்க மாறுதல்கள் செய்யத் தன்னாலியன்றவரை பாடுபடும்.

ஸ்ரீ படேல் சென்றமாதம் 18ந் திகதி சிம்லாவை விட்டுப் புறப்பட்டார். அவர் காந்திஜியையும் வெளிநாட்டு இந்தியர் விஷயத்திற் சிரத்தையுடைய பிரமுகஸ்தர்களையும் கண்டு பேசினார். அடுத்தவாரம் பாமிய தூதுக்கோஷ்டியினர் சென்னைக்குவரும் வரையில், அவர் இங்கு தங்கியிருந்து அப்பால் டில்லிக்குப் போய்ச் செப்டம்பரில் இலங்கை செல்வார்.

#### வங்க வியாபாரிகளின் கோரிக்கை

கல்கத்தா ஆக 8

இந்திய-இலங்கைச் சம்பாஷணையைப் பின்போட்டு வைக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்தி வங்க வியாபாரிகள் சங்க நிருவாகசபை வைஸ்ராய்க்கும், இந்திய அரசாங்கத்துக்கும் தந்தி அனுப்பியிருக்கின்றனர். குடியேற்றப் பிரச்னையையும் வியாபாரப் பிரச்னையையும் பிரிக்கக்கூடாதென்றும் இலங்கைத் தூதுக்கோஷ்டியில் வியாபாரிகளின் பிரதிநிதிக்குப் பதிலாக உத்தியோக சம்பந்தமில்லாதவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் மேற்படி தந்தியிற் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பிரவேசச்சீட்டு விற்பனை ஒரேதினத்தில் இருந்திருக்க முடியாதென்று சொல்லப்படுகிறது.

இன்று களியாட்டத்தைக் கேணல் டி. வை. நயிற் திறந்து வைத்தார், மழைபெய்த போதிலும் போதிய கூட்டமிருந்தது. அவ்வமயம் பண்போககே அதிகாரி பேசும்போது சிலதினங்களுக்கு முன்னர்க் களியாட்டத்துக்கு ரூபா 500 நன்கொடையை வழங்கியவர் மிஸ்டர். பிரான்ஸிஸ் ஜே. ஹாலோ மிஸ்டர். கார்டன் பைப்பரும் ரூபா வேறொன்றும்500நன்கொடை வழங்கியிருப்பதாகவுந் தெரிவித்தார்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோடு

இல. 16265

வண்ணார்பண்ணை-சண்முகநாயர் . பாலசுப்பிரமணிய ஐயர் வழக்காளி.

எதிராக

தாவடி இப்பொழுது எல்லைத்தியாவில் P. W. D. ஓவசியராகவிருக்கும் பொன்னம்பலம் துரைராசா, யாழ்ப்பாணத்தில் இருந்து காலஞ்சென்ற என். பாலசுப்பிரமணியத்துடையவும் அவர் மனைவி நித்தியலட்சுமியுடையவும் ஆஸ்திக்குப் பிரதிகாரியஸ்தரை - எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் மேற்குறித்த இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஈட்டுக்கடனுறுதியின் சொத்தை நான் யாவும் கீழ்க் காணப்படும் தீர்வைத்தொகைக்காக 1941ம்ஹூ செப்டெம்பர்மீ 6உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் குறித்த ஈட்டுக்காணி முகப்பில் கின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 676ம் இதற்கு 5.12.40 திகதி தொடக்கம் இறுக்கும் திகதிவரையும் 100-க்கு 9வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 122 சதம் 30ம்.

குறித்த ஈட்டுக் கடனுறுதியின் விபரம்.

1935-ம்ஆ பங்குனிமீ 4ம்௳ கொத்தாரிஸ் சி. வ. கைலாசால் 19ம் இல. ரூபா 1000க்கும் வட்டிக்கும் எழுதிக் கொடுத்த ஈட்டுறுதி - இதன்படி உரித்துச்சேர்ந்தது முழுவதும்,

இந்த ஈட்டுக்கடனுக்குப் பொறுப்பாகக் கொடுக்கப்பட்ட ஈட்டாதன விபரம்.

வண்ணார்பண்ணை கிழக்கு இறை, கட்டாடி தோட்டமும், செல்வி வளவும், ஓலைத்தறையும் மறுபிரிவுகளும் கிட. பர. 4ம், வீடும், தலைவாயிலும், கிணறும், செய்பயிர் வான்பயிர்களும் மற்றும் அதைச் சேர்ந்தவைகளும். எல்லை கிழக்கு றெயில் றோட்டு, வடக்கு வயிரமுத்து சோமுவினதனம், மேற்கு சுப்பிரமணியம் பெண் இராசம்மாவினுதனம், தெற்கு சின்னத்தம்பி கணபதிப் பிள்ளையினுதனம். இடங்களும் இவைச் சேர்ந்தவைகளும்.

பெ. முத்துத்தம்பி
கொமிஷனர்.

1941 ம்ஹூ ஆகஸ்டு(ஆவணி)மீ 6௳
(Mis 84, 14.8.41)

## விற்பனவு விளம்பரம்

இல:1334 P

பருத்தித்துறையிலுள்ள யாழ்ப்பாண டிஸ்திரிக் கோட்டில்

1. தம்பனை சுப்பிரமணியம் தம்பையாவின் பெண்
2. அன்னப்பிள்ளையும் வழக்காளிகள்

எதிராக

| | | |
|---|---|---|
| 1. | | தம்பனை வல்லிபுரம் கைம்பெண் வேலாயிப்பிள்ளை |
| 2. | „ | நாகப்பர் விஜயரத்தம்பி |
| 3. | „ | நாகப்பர் வைரமுத்து |
| 4. | „ | கணவதிப்பிள்ளை கைம்பெண் அன்னம் |
| 5. | „ | கணவதிப்பிள்ளை சண்முகம் (தற்காலம் வவுனியா) |
| 6. | „ | கணபதிப்பிள்ளை ஆறுமுகம் |
| 7. | „ | காசியர் கதிரவேலு பெண் |
| 8. | „ | பாக்கியமும |
| 9. | „ | கணபதிப்பிள்ளை மகள் கல்லம்மா |
| 10. | „ | கணபதிப்பிள்ளை மகள் இராசம்மா |
| 11. | „ | கணபதிப்பிள்ளை மகள் [illegible] |
| 12. | „ | கணபதிப்பிள்ளை சர்வானந்தம் |

9. 12 ம்—திரிகள் பராய மற்றவர் கனபராபரிப்புக்காரி 4-ம் எதிரி.

எதிராளிகள்

மேற்சொல்லிய இலக்கப் பிரிவிடல் வழக்கில் தீர்ந்த விற்பனவுத் தீர்வையின் படியும் எனக்குக் கோட்டால் அனுப்பப்பட்ட கொமிஷன் அதிகாரப்படியும் 1941-ம் ஆ புரட்டாதி மீ 27ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் பின்னால் விவரிக்கப்படும் ஆதனம் அவ்வாதனத்திற்குள் கின்று மதிப்புத் தொகையிலிருந்து முதலாவதாக மேற்சொல்லிய பங்காளருக்கிடையிலும் அவர்கள் கேட்கத் தவறினல் உடனே பிரசித்த ஏலத்திலும் விற்கப்படும். காணியின் விலைமதிப்பு ரூபாய் 350,

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக்வடமராச்சிப்பகுதி பருத்தித்துறைக் கோயிற்பற்று தம்பனை இத்தான் சீமா இதற்கு உலாந்தாமேஸ்தர் மா. வேலுப்பிள்ளையால் 606 ம் இலக்கத்தில் விக்தாரிக்கப்பட்டு வழக்கில் அனேக்கப்பட்டிருக்கும் படத்தின்படி லே. பர 4. குளி 2. பனைகளும் எல்லை கிழக்கு சிதம்பரப்பிள்ளை இராசரத்தினத்துக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். வடக்கு வழக்காளிக்கும் மறுபேருக்கு முடைய வாதனம், மேற்கு இராமலிங்கம் கந்தரத்திற்கும் மறுபேருக்குமுடைய வாதனம், தெற்கு பொன்னையா வைத்திலிங்கத்துக்கும் மறுபேருக்குமுடைய வாதனம்

மா. வேலுப்பிள்ளை
கொம்மிஷனர்.

புலோலி கிழக்கு, பருத்தித்துறை,
1941-ம் ஆ ஆவணி 12-ம் திகதி,
Mis 86, 14. 8. 41.

# சிலாபம்-புத்தளம் புகைரதப் பாதை

## நஷ்டத்திலோடுவதால் நீக்கிவிட ஆலோசனை

### போக்குவரத்து மந்திரிசபைக்குச் சிபார்சு

சிலாபத்திலிருந்து புத்தளத்துக்குச் செல்லும் புகைவண்டிப் பாதையைப் பிரித்து எடுத்து விடுவதற்கான செலவுத் திட்டம் புகைரத அதிகாரிகளால் இப்பொழுது தயாரிக்கப்படுகிறது. குறித்த பாதையை மூடிவிடும்படி போக்குவரத்து மந்திரி சபைக்குச் சிபார்சு செய்வதற்குப் பூர்வாங்க நடவடிக்கையாகவே இத்திட்டம் தயாரிக்கப்படுகிறது.

போதிய போக்குவரத்தில்லாததால் ஏற்கெனவே இரண்டு புகைரதப் பாதைகள் மூடப்பட விருக்கின்றன. இந்தச் சிபார்சு ஒப்புக்கொள்ளப்பட்டால், சிலாபம்-புத்தளம் புகைரதப்பாதை மூடப்படவிருக்கும் மூன்றாவது புகைரதப் பாதையாகும். இந்த மூன்று பாதைகளுள் இதுவே மிக நீளமுள்ளதாகும்.

மூடப்பட விருக்கும் முதலாவது பாதை உடப்புசலவைப் புகைரதப் பாதையாகும். இரண்டாவதாக யட்டியாந் தோட்டைப் புகைரதப் பாதை அடுத்த வருட ஆரம்பத்தில் மூடப்படவிருக்கிறது. இப்போதைய தீர்மானத்தின்படி பாதிக்கப்படவிருக்கும் பாதையின் நீளம் 32 மைல்.

சிலாபம்-புத்தளம் பாதை மூடப்படாவிடின், பாதை முழுவதுக்கும் புதிதாகச் சிலீப்பர்கள் போடப்பட வேண்டுமென்று எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

இந்த நீண்ட பாதையிலிருந்து கிடைக்கக்கூடிய தண்டவாளம் முதலிய சாமான்களைப் புகைவண்டியின் ஏனைய பாகங்களுக்குப் பயன்படுத்திக் கொள்வதே அதிகாரிகளின் நோக்கமாகும்.

சிலாபத்துக்கும் புத்தளத்துக்குமிடையிலுள்ள ஆறு நிலையங்களையும் அங்குள்ள ஏனைய புகைரதக் கட்டிடங்களையும் என்ன செய்வதென்னும் விஷயம் பின்னர்த் தீர்மானிக்கப்படும். இதிற் பெரும்பாலான கட்டிடங்கள் ஏனைய அரசாங்கப் பகுதிகளாற் பயன்படுத்திக் கொள்ளப்படும். அல்லது வாடகைக்கு விடப்படுமென்று ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது.

புத்தளம் புகைரதப்பாதை அமைக்கப்பட்ட காலத்தி லிருந்து நஷ்டத்திலேயே அது நடைபெற்று வந்திருக்கிறது. இப்பாதை கடைசிவரை தெருவையுங் கால்வாயையும் அடுத்துச் செல்வதுதான் அதற்குக் காரணமென்று சொல்லப்படுகிறது.

புகைரத அதிகாரிகள் இந்த விஷயம் பற்றிப் பலமுறை ஆலோசனை செய்து குறித்த பாதையை நஷ்டமில்லாமல் வரவும் செலவுஞ் சரியாக இருக்கும்படியாவது செய்வதற்கு எத்தனையோ முறைகளைக் கையாண்டனர்.

இப்பொழுது இப்பாதையில் ஒரேயொரு புகைரதமும் ஒரு றெயில் மோட்டாரும் மாத்திரம் போய் வருகின்றன. அப்படியிருந்தும், அதன்மூலம் கிடைக்கும் வருமானம் அதன் செலவுக்குப் போதியதாயில்லை.

போக்குவரத்துக் கொம்மிஷன் இப்பாதையை நீர்கொழும்பிலிருந்து புத்தளம் வரைக்கும் மூடிவிடும்படி சிபார்சு செய்திருந்தது.

## 80 பார்சல் ஜெர்மனிய பிரசாரப் பிரசுரங்கள்

### பூயனஸ் அயர்ஸில் சோதனை

பூயனஸ் அயர்ஸ் ஆக [illegible]

இரு மாதங்களுக்கு முன்பு "காஜுமாரு" என்னும் ஒரு ஜப்பானிய வர்த்தகக் கப்பலில் இங்கு கொண்டுவந்து இறக்கப்பட்ட 80 பார்சல்களை அர்ஜென்டினாவுக்கு விரோதமான நடவடிக்கைகளைப் பற்றி விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் பாராளுமன்ற நிருவாகசபையினர் நேற்றுத் திறந்து பார்த்துப் பரிசோதனை செய்தனர்.

குறித்த பார்சல்கள் இங்குள்ள ஜெர்மன் ஸ்தானிகர் காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டிருந்தவை. இப்பார்சல்களில் 800 கிலோகிராம் நிறையுள்ள ஜெர்மனிய பிரசாரப் பிரசுரங்கள் இருந்தன. பார்சல்கள் திறந்து பார்க்கப்பட்டபோது அர்ஜென்டினா அந்நிய நாட்டுக் காரியாலயப் பிரதிநிதியும் சமுகமளித்திருந்தார்.

## மாதருக்கு விவசாய மந்திரியின் உபதேசம்

### "வீட்டுக் காரியங்களில் அதிக கவனஞ் செலுத்தவேண்டும்"

பாணந்துறை, ஆக, 10—

பாணந்துறை டிஸ்திரிக்கில் வாழ்க்கை நிலைமையை முன்னேற்றமடையச் செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட சங்கத்தின் இரண்டாவது வருடாந்தக் கொண்டாட்டம் இன்று பின்னேரம் தக்கிரிமுல்லை அரசாங்க ஆண்பாடசாலையில் நடைபெற்றது. அதில் விவசாயமந்திரி திரு. டி. எஸ். சேனநாயகா பேசும்போது தற்கால வாலிபர்களிற் பெரும்பாலானோர் சுதேசிப் பொருள்களைவிட விதேசிப் பொருள்களில் அதிக மோகமுள்ளவர்களாயிருப்பதைக் கண்டித்தார். வாழ்க்கைத் துணைவிகளைத் தெரிவு செய்யும் விஷயத்திலுங் கூட இதே மனோபாவம் இருப்பதாயும் அவர் கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது:—

"யுத்த நிலைமையின் விளைவாகாம் எமக்கு வேண்டியவற்றை உள்நாட்டில் உற்பத்தி செய்ய வேண்டிய அவசியத்தை உணர்ந்திருக்கிறோம்.

"இந்நாட்டுப் பெண்கள் வீட்டு விஷயங்களைக் கவனிப்பதிற் போதிய நேரத்தைச் செலவிடுவதில்லையென்று நான் கருதுகிறேன். அவர்கள் வீட்டுக்காரியங்களில் அதிக கவனஞ் செலுத்தி அவ்விஷயத்தில் இப்பொழுதுள்ளதைவிட அதிக திறமைசாலிகளானால், அவர்கள் கணவன்மார் கிளப்புகளுக்கும் சங்கங்களுக்கும் போகாமல் வீட்டிலேயே தங்கி விடுவார்கள்."

திரு. சேனநாயகா பொல்கொடைத் திட்டம் பற்றியும் குறிப்பிட்டார். இதுபற்றித் திரு. டி. எஸ். டி. பொன்சேகா கூட்ட ஆரம்பத்திற் பேசினார்.

சங்கத்தின் கௌரவ காரியதரிசியான திரு. டி. டி. பிலிப்ஸ் ஓர் அறிக்கையைப் படித்தார்.

ஸ்ரீமதி. டி. எஸ். டி. பொன்சேகா ஏழைக் குழந்தைகளுக்கும் தாய்மாருக்கும் பல வெகுமதிகளை வழங்கினார்.

திரு டி. எஸ். டி. பொன்சேகா, சுகாதாரப்பகுதி டைரெக்டர் டக்டர். டப்ளியூ. ஜீ. விக்கிரமசிங்க நாட்டுறவுச் சங்கங்களின் தரகரிக ரஜிஸ்ட்ரார் திரு. ஜி. டி. சொய்சா ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

சுகாதாரப் போட்டியில் தக்கிரிமுல்லையில் அரசாங்கப் பெண்பாடசாலை ஆண்பாடசாலையைத் தோற்கடித்து விட்டது. வெற்றி பெற்ற பாடசாலைக்குச் சுகாதாரச் சங்கத்தார் சன்மானிக்கப்பட்ட பரிசுக்கிண்ணம் வழங்கப்பட்டது.

## வயோதிகமாதின் பரிதாப மரணம்

### புகைவண்டியால் மோதி விழ்த்திக் கொல்லப்பட்டாள்

கண்டி, ஆக, 10 ௳

நேற்றுப் பின்னேரம் கொழும்பிலிருந்து கண்டிக்கு வந்த புகைரதம் பேராதனையில் ஒருவயோதிக மாதை மோதிற்று.

அத்தக் கிழவி அதே புகைவண்டியிற் கண்டி புகைரத நிலையத்துக்குக் கொண்டு செல்லப்படும்போது, வழியில் மரணமானாள். பிரேதம் இதுவரை இனம் கண்டு கொள்ளப்படவில்லை.

# திருச்சிரேடியோ நிகழ்ச்சி

(மீ 396)

## வெள்ளி ஆகஸ்ட் 15

முதலாவது ஒலிபரப்பு

காலை 7-30 சிதாரம்பம் (இசைத்தட்டு) 7-40 தமிழில் செய்திகள் 7-50 குராஷ்டி-வசிப் 8-00 கவ்வாலிகள் (இசைத்தட்டு) 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 ஸ்ரீமதி. கே. கல்பகம் 9-00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-00 வாத்திய வகைகள் (இசைத்தட்டு) 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் ... ஸ்ரீமதி. கே. கல்பகம் 2-00 தமிழ் செய்திகள் 2-05 சினிமா உலகம் (இசைத்தட்டு) 2-30 ஒலிபரப்பு முடிவு.

மூன்றுவது ஒலிபரப்பு

மாலை 5-00 வாத்தியகீதம் 5-15 என். ஆர். கோவிந்தசாமி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கே. பாலகிருஷ்ண பிள்ளை 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 இலக்கிய வாசகம் 7-15 உலகமே நாடகம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-50 என். ஆர். கோவிந்தசாமி 8-30 உலகவிவகாரங்கள் 8-45 கே. பாலகிருஷ்ண பிள்ளை 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 10-00 ஒலிபரப்பு முடிவு.

## சனி ஆகஸ்ட் 16

முதலாவது ஒலிபரப்பு

காலை 7-30 சிதாரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 திருவாசக விளக்கம் 8-00 பஜனை 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 திருவழுந்தூர் ஏ. கே. கணேசம் பிள்ளை பாட்டு 9-00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-00 படங்களிலிருந்து (இசைத்தட்டு) 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 திருவழுந்தூர் ஏ. கே. கணேசம் பிள்ளை பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 ஸ்ரீமதி டி. என். ரங்கம்மாள் பாட்டு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மூன்றுவது ஒலிபரப்பு

மாலை 5-00 மதராஸிலுள்ளபடி ஸ்ரீரங்கா வாத்திய கோஷ்டி 5-45 இசைப்பயிற்சி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 டி. என். ரங்கம்மாள் பாட்டு 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 செய்திக் கடிதம் 7-15 தானவாத்தியக் கச்சேரி 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-50 மதராஸிலுள்ளபடி மதுரை மணி அய்யர் 8-30 காலவறிவிப்பு 9-15 இடைவேளை (இசைத்தட்டு) 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகளும் சொற்பொழிவும் 10-00 ஒலிபரப்பு முடிவு.

## ஞாயிறு ஆகஸ்ட் 17

முதலாவது ஒலிபரப்பு

காலை 7-30 சிதாரம்பம் (இசைத்தட்டு) 7-40 தமிழில் செய்திகள் 7-50 தேவாரத்தை 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 டி. கே. வேங்கடாசலம் பி. பி. வைத்யநாதன் பாட்டு 9-00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

12-00 நால் வகைகள் (இசைத்தட்டு) 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 டாக்கிப் பாட்டுகள் (இசைத்தட்டு) 2-00 தமிழில் செய்திகள் 2-05 டி. கே. வேங்கடாசலம் பி. பி. வைத்யநாதன் பாட்டு 2-30 ஒலிபரப்பு முடிவு

மூன்றுவது ஒலிபரப்பு

மாலை 5-00 வாத்திய கீதம் 5-15 டி. என். மாணிக்கம் பாட்டு 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 வி. எஸ். கோமதி சங்கர ஐயர் வீணை 6-30 கிராமவாசிகளுக்கு 7-00 டி. கே. பட்டம்மாள் (இசைத்தட்டு) 7-15 எது தமிழ்? 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-50 ஸ்ரீமதி. டி. என். மாணிக்கம் பாட்டு 8-30 எங்கள் தபால் பெட்டி 8-45 வி. எஸ். கோமதி சங்கர ஐயர் வீணை 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகளும், சொற்பொழிவும் 10-00 ஒலிபரப்பு முடிவு

## திங்கள் ஆகஸ்ட் 18

முதலாவது ஒலிபரப்பு

காலை 7-30 சிதாரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 உப்பிலியப்பன் கோவில் எ. பி. சின்னத்தம்பி பிள்ளை நாகஸ்வரம் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 விரும்பும் பாட்டுகள் (இசைத்தட்டு) 9-00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-00 திரைகானம் (இசைத்தட்டு) 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 ஸ்ரீமதி. டி. ஏ. கந்தாம்பாள் பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மூன்றுவது ஒலிபரப்பு

மாலை 5-00 உப்பிலியப்பன் கோவில் எ. பி. சின்னத்தம்பிப் பிள்ளை நாகஸ்வரம் 5-45 இசைப்பயிற்சி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 ஸ்ரீமதி. டி. ஏ. கந்தாம்பாள் பாட்டு 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 ஜாதிகாரம் (இசைத்தட்டு) 7-15 செய்திச் சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-50 ரேடியோக் கச்சேரி மைசூர் கே. வாசுதேவாசார் பாட்டு வி. ... வயலின் டி. ஏ. மீனாக்ஷிசுந்தரம் மிருதங்கம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகளும் சொற்பொழிவும் 10-00 ஒலிபரப்பு முடிவு.




மெலிந்து சோர்வுற்று பலமிழந்து ஊக்கமற்று இருக்கும் சகலருக்கும் ஓர் விசேஷச் செய்தி

ஜீவாதார உலோக சத்துக்களடங்கிய இந்தச்சிறந்த சாதனம் உங்களுக்குப்புதிய ஆரோக்கியமும் ஊக்கமும் பலமும் அளிக்கும்

பழனி சி. எம். சாமி அசல் தங்கபஸ்பத்தை இன்று முதலே சாப்பிட்டு வாருங்கள். உஷ்ணம், மேகம், கடுப்பு, மூலம், நீர்ச்சுருக்கு, வாதம், தொய்வு, க்ஷயம், குன்மம் இவைபோன்ற வியாதிகள் எல்லா நோய்களும் நீங்கிவிடும். கண்டிப்பாகப் பலனடைவீர்கள், தேகம் பூராவும் புது ரத்தம் பாயும். பசி ருசியுண்டாகும். நரம்புகள் வலுவடையும், கண்கள் பிரகாசமடையும். நீங்கள் வாலிப பலமும் தேக திடகாத்திரமும் அடைவீர்கள்.

24 நாள் பஸ்பம் விலை ரூபா 10

தலைமை ஆபீஸ்:- மலையப்பசாமி வைத்தியசாலை பழனி S I

கிளை ஆபீஸ்:- மலையப்பசாமி வைத்தியசாலை வண்ணார்பண்ணை கதிரேசன் கோவிலடி யாழ்ப்பாணம்

Y221 31-3-41—30.3.42



வெள்ளவத்தை ஸ்பின்னிங் அன் வீவிங் மில்ஸின்

# புடவைகள்

இப்போது யாழ்ப்பாணத்தில்வொவ்வொருவீட்டிலும் பேசப்படும் வார்த்தைகளாம்

ஒருமுறை பரீக்ஷித்தால்— எப்போதும் விரும்பப்படுவது.

ஒவ்வொருவிதமான தினிசிலும் நாம் புடைவைகளைச் செய்கிறோம்.

| | |
|---|---|
| வேட்டிகள் | டிரில்லுகள் |
| சால்வைகள் | சூர்த்துணிகள் |
| சேலைகள் | ரகுர்கள் |
| சாரங்கள் | 'ஷேட்' துணிகள் |
| கப்பாய்கள் | ஷீட்டுகள் |
| துவாய்கள் | பஞ்சணைஉறைகள் |
| லோங்குளோத்ஸ் | மேசைத்துணிகள் |
| மல்லுகள் | பப்ளின்கள் |
| பெட்ஷீட்டுகள் | பிளனல்துணிகள் |

முதலிய இன்னும்பல எம்மிடம் உண்டு. எங்கள் சில்லறைக் கடைக்கு வாருங்கள்.

பெரியகடை, யாழ்ப்பாணம்.

வெள்ளவத்தை ஸ்பின்னிங் அன் வீவிங்மில்ஸ்,

(இந்தியாவில் ஈதாபிதமானது):

(அங்கத்தவரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)

Mis 127. 11-10-40—



# புதிய வெளியீடுகள்

சிவிக்ஸ் (Civics) எனப்படும்

# குடி இயல் நூல்

இலங்கை வித்தியாபகுதியாரால் அங்கீகரிக்கப் பெற்றவை.

(அங்கீகார இலக்கம். 21 A & B / 41 திகதி 3-7-41)

6-ம் வகுப்புக்குரிய முதற்புத்தகம் விலை சதம் 50

7-ம் வகுப்புக்குரிய இரண்டாம் புத்தகம் விலைசதம் 50

யாழ்ப்பாணம்

சைவபரிபாலன சபைப் பிரசுரமாக அச்சிடப்பட்டுள்ளன.

மானேஜர், சைவப்பிரகாச யந்திரசாலை, யாழ்ப்பாணம்.



# தி மலாயன் டிரேடிங் கொம்பனி

(சிங்கப்பூர்க் கொம்பனி)

இருப்பு: பித்தளைச்சாமான்கள், சிமேந்துவகைகள் வர்த்தனவு செய்வோர் பெரியகடை, யாழ்ப்பாணம்.

"பூநெறூனைட்டிட்"

Y 19. 4.3.41—3.3.42  K. A. இரத்தினசிங்கம்


# "பழிக்குப் பழி வாங்குக"

## சோவியத் மக்களுக்குச் சேனாதிபதியின் விண்ணப்பம்

மொஸ்கோ ஆக 8

மத்திய போர்முனையிலுள்ள ருஷிய ராணுவத்தின் பிரதம சேனாதிபதியான மார்ஷல்டிமோஷெங்கோ வெளியிட்டுள்ள ஒரு பிரகடனத்தில் இப்பொழுது ஜெர்மானியரால் தற்காலிகமாக ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் ருஷியப் பிரதேசங்களில் வசிக்கும் சோவியத் மக்கள் சத்துருமீது தொடர்ந்து பழிக்குப் பழி வாங்கி வரவேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார். அப்பிரகடனம் மேலும் கூறுவதாவது:-

"சோவியத் மகாஜனங்களே! கொரிலாப் படையிலுள்ள சேனைகள்! பின்பக்கமிருந்து தாக்கி ஜேர்மன் துணைப் போக்குவரத்துகளை நாசமாக்குங்கள். பாலங்களை எரித்து நிர்மூலமாக்குங்கள். தந்திக் கம்பிகளையும் டெலிபோன் கம்பிகளையும் வெட்டி விடுங்கள். ஜெர்மன் கொள்ளையர்கள் பதுங்கியிருக்கும் வீடுகளையும் காடுகளையும் நெருப்பு வைத்து நாசமாக்குங்கள்! சத்துருவுக்கு உணவு கொடாதீர்கள். கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்ற முறையிற் பலாத்காரத்தைப் பிரயோகியுங்கள்! நமது வெற்றி சமீபித்து விட்டது.


காயகல்பமருந்துகளால் செய்யும் அனுகூல சிகிச்சை

மேகராசா

சலரோகம், நீரழிவு முதலிய வியாதிகளுக்கு ஓர் கைகண்ட மருந்து.

பத்தியமில்லை.

பரீட்சித்துப் பார்க்கத் தெரியும். ஒரு போத்தல் விலை ரூபா 4.00 (15 நாட்களுக்கு)

காயசித்தி, தந்துவக்குறைவு, சலரோகம், சிறுபின்ளைவாதம், குட்டம், தோற்புரை வியாதிகள், இரத்தக் கொதிப்பு, வாதம் முதலிய வியாதிகளுக்கு நேரில் கண்டு பேசிக் கொள்ளலாம்.

டாக்டர் K. T. மங்களம் R. I. M. P. (சென்னை) M. S. V. S. மெம்பர்

கண்டிரோட், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

Q 83  7.8—6.11.41


# விலிங்டன்பிரபு அசௌக்கியம்

லண்டன், ஆக, 9—

வில்லிங்டன்பிரபு தமது லண்டன் வாசஸ்தலத்திற் சுபவாதசாத்தாற் பீடிக்கப்பட்டு மிகவும் கவலைக்கிடமான நிலைமையில் இருக்கிறார். அங்கு லேடிவில்லிங்டன் அவருக்குவேண்டிய உதவிகளை அளித்திருக்கிறார். அவரது தேகநிலைமையிற் சிறிது அபிவிருத்தி ஏற்பட்டிருப்பதாக இன்றிரவு வெளியான அறிக்கை கூறுகிறது.

# வேலையினின்றும் இளைப்பாறுகின்றார்

சென்ற 20 வருடகாலம் மலாய்நாட்டில் வசித்தரும் 15 காலமாக மலாய்நாட்டு றப்பர் ஆராய்ச்சிச்சாலையிற் கடமை பார்த்தவருவாகிய வட்டுக்கோட்டை வாசர் திரு. K. இளையதம்பியவர்கள் இம்மாதத்தொடக்கம் தமது வேலையினின்றும் இளைப்பாறுகிறார் என்று அறிகிறோம்.

# பழைய நூல்களைப் பாதுகாத்தல்

1-ம் பக்கத்தொடர்ச்சி

காட்சிக்கு வைப்பதற்குமல்ல என்பதைக் கேயர்களறிய வேண்டும். ஆனால் எங்களுடைய் நோக்கம் இந்த புஸ்தகங்களைச் சேமித்துவைத்துப் படிக்க விரும்புவோருக்குக் கொடுப்பதற்கேயாம்.

இவ்விதமான புஸ்தகங்களைக் கல்லூரியிலிருந்து படிப்பதற்கும் பார்ப்பதற்கும் விரும்பிய மக்களெல்லாரையும் இக்கல்லூரி உவகையுடன் வரவேற்கின்றது.

இப்படிக்கு
க. செல்லையா,
நூல் நிலைய அதிபர்.

யாழ்ப்பாணக்கல்லூரி
வட்டுக்கோட்டை
11-8-41

# தமிழ் இலக்கிய மகாநாட்டுத் தலைமையுரை

1-ம் பக்கத் தொடர்ச்சி

காப்பியப் பேரிலக்கணம் அச்சில் வெளிவந்தமையாகும். இவ்வரிய நூலை உரையுடன் பதிப்பித்த பேருபகாரி ராவபகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளையவர்களாவர்.

அச்சின் வசதியாகச் சிலபல நூல்கள் தோன்றவே, தமிழ்க்கல்வியின் மீது தமிழ் மக்களுக்குப் பேரவா எழுந்தது. 'அறிதோ றறியாமை கண்டற்றால்' என்பது பொய்யாமொழி யன்றோ! மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் சங்க நூல்களை ஒவ்வொன்றாகப் பரிசோதித்து வெளியிடத் தொடங்கினார்கள். இவர்கள் செய்துள்ள பேருபகாரத்தாலே தமிழின் தொன்மையும் தமிழ் மக்களின் நாகரிகமும் யாவரும் விரும்பியாராயும் விஷயங்களாய் முடிந்தன. இவ்வகை ஆராய்ச்சிகளுக்கு ஆங்கில கல்வி பெரிதும் துணைபுரிந்தது. ஸ்ரீ வி. கனகசபைப் பிள்ளையவர்களும், ஞானமணியத்தின் ஆசிரியர் ஸ்ரீ பி. சுந்தரம்பிள்ளையவர்களும் இத்துறையில் முதன்மையாகக் குறத்தக்கவர்கள். தமிழ் நூலாராய்ச்சிக்கும் தமிழ்மொழியாராய்ச்சிக்கும், தமிழ்நூற் பாதுகாப்பிற்கும், தமிழ்க் கல்விக்கும் ஒரு பொது நிலையம் அமைக்க வேண்டுவது அத்தியாவசியமாயிற்று.

இவ் அவசியத்தைப் புணர்ந்த செல்வஸ்ரீ பாண்டித்துரைத் தேவரவர்கள் மதுரையிலே தமிழ்ச்சங்கம் ஒன்று நிறுவியமைத்தார்கள். தங்கள் தமிழாராய்ச்சிக்குப் போதிய இடமில்லாது வருந்திக் கொண்டிருந்த தமிழறிஞர்கள் பலரும் இச்சங்கத்தை அடைக்கலமாக அடைந்தனர். தமிழ்நாடு தனியுரிமை பூண்டு விளங்கிய இம் மதுரை மாநகரில் இச்சங்கம் நிறுவப் பெற்றமையை எண்ணி யெண்ணி அனைவரும் மகிழ்ந்தனர். இச்சங்கத்தை நான்காஞ் சங்கமெனப் பலரும் கொண்டாடினர். தமிழ்க் கலாசாலை யொன்று ஏற்படுத்தப்பட்டது. "செந்தமிழ்" என்னும் பத்திரிகை யொன்று மாதந்தோறும் வெளியிடப் பெறலாயிற்று. இச்சங்கத்தின் முக்கியமான அங்கத்தினர்களிலொருவர் ஸ்ரீ வி. கோ. சூரியநாராயண சாஸ்திரிகளாவர். இவர்களிடத்தே ஆங்கிலக் கல்வியும் தமிழ்க்கல்வியும் சிறந்து விளங்கின. தாமே பல நூல்களை இயற்றியதோடு, பல மாணவர்களுக்கு இவர் இயற்றமிழாசிரியராயும் விளங்கினர். சென்னையில் தமிழ்பற்றிய ஒரு புதுக்கிளர்ச்சி இவர்களாலே உண்டாகியது. பலரும் தமிழ் நாடகங்கள் முதலியன இயற்றினர். புது முறையிற் செய்யுட்களும் எழுதலாயினர்.

இவ்வகையான தமிழ்க் கிளர்ச்சியோடு 20ம் நூற்றாண்டு தொடங்கிற்று. இந்நூற்றாண்டு தொடங்கி 40 வருஷங்கள் ஆகிவிட்டன. நமது தமிழ்மொழியின் நிலை இப்போது எவ்வாறுள்ளது? எங்கும் தமிழ் நூல்களை எழுத வேண்டுமென்ற ஓர் பரபரப்பு காணப்படுகிறது. ஆண் பெண் என்ற இருபாலாரும் நூலியற்றும் செயலில் முனைந்து நிற்கின்றார்கள். வெளிவரும் நூல்களில் ஒரு பெரும்பகுதி கதைகளாகவும் குட்டிக் கதைகளாகவும் நாடகங்களாகவும் உள்ளது. ஒரு சிலர் கவிதைகளும் எழுதுகின்றனர். ஆங்கிலங்கற்ற அறிஞர் ஒரு சிலர் சரித்திர வரலாறுகள் முதலியன எழுதி வருகின்றனர். மிக மிகச் சிலரே விஞ்ஞான சாஸ்திர முதலியன பற்றி எழுதுகின்றனர். இவைகளேயன்றி, பத்திரிகைகளும் புற்றீசல் போலத் தோன்றுகின்றன. மாணவர்களுக்கென்று எழுதப்படும் நூல்கள் நூற்றுக்கணக்கில் வெளிவருகின்றன. இன்னவை அனைத்திற்கும் பொதுவான ஒரு குறையாதெனின் இவை பெரும்பாலும் நல்லதமிழ்நடையில் பிழையில்லாதபடி எழுதப்பட்டிருக்க மாட்டா. தமிழ் மட்டும் கற்றவர்கள் பலரும் நூல்கள் எழுதி வருகிறார்கள். இவர்களிற் பெரும்பாலார் இக்காலத்துத் தமிழில் எழுதுவதில்லை. வழக்கொழிந்த சொற்களையும் வாக்கிய அமைதியையும் கையாண்டு, கற்போருக்குப் பேரிடர் விளைத்து வருகின்றனர். அன்றியும் இவரேர் எழுதுவதில் விஷயங்களை நுருக்கமாட்டார். விஷயக் குவியத்தை மறைப்பதற்காகவே அரிதுணர் சொற்களை இவர்கள் வழங்குகிறார்களெனத் தோன்றுகிறது. இக்கலையில் தமிழ்-இலக்கியம் அபிவிருத்தி யடைவதற்கு இடமேயில்லை. (வரும்)


விசேஷ அறிவித்தல்

சம்பூரண கைரேகை பலன், ஆருடம் (சித்தனை சாஸ்திரம்) முதலிய சாஸ்திர சம்பந்தமான எல்லா விஷயங்களையும் கீழ்க் காண்பவரிடம் அறிந்து கொள்ளலாம்.

கிரகஸ்புடம், தச வர்க்கம், அஷ்டவர்க்கம், பாவநிலை முதலிய கணித வகைகளும், மகாதெசா புத்தி பலன், துவாதச பாவபலன், கோசரபலன், காலசக்கரபலன் முதலியன அடங்கிய பெரிய ஜாதகம் எழுத ரூபா 10/—

நா. சின்னத்துரை
போக்கத்தை,
கைதடி வடக்கு, கைதடி.

Y 67  20-7-41—19-7.42


# வட இலங்கைச் சங்கீத சபை

வேனிற் காலச் சங்கீதப் பாடசாலை இவ்வருஷம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆகஸ்டு மீ 16ந்திகதி தொடக்கம் செப்டம்பர் மீ 6. திகதி வரை நடக்கும்.

சம்பளம் முதலிலேயே கொடுக்கப்படுதல் வேண்டும்.

வயலின் எல்லா வகுப்புகளும் ரூ 8
வாய்ப்பாட்டு வயதடைந்தவர்கள் ரூ 4
சிறுவர்களுக்கு ரூ 3

A. J. R. வேதவனம்,
வடபிரிவு வித்தியாதரிசி
தலைவர், வ. இ. ச. சபை.

Mis 80 4. 14. 8. 41.


திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரை ...ளது)

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.

ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா 25ம் ஆதாயமும் பெறலாம்

வங்கித்தொழிலும் வியாபாரமும் இலாபகரமாய் நடக்கின்றன.

தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.

இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம். உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும் நிபந்தமாயும், சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்வோம்.

பங்குகளுக்கு முந்துங்கள்!

வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

(வி)  (Y. 22.  1-11-40 to 31-10-41)



# குயின்பிரண்ட் (அரசி அடையாள) ஓடுகள்

குறைந்த விலை  நிறைந்த குணம்

எங்கும் பெயர்பெற்ற, உறுதிவாய்ந்த ஊறாத, நல்ல சத்தமுள்ள யாவரும் விரும்பும் அழகிய ஓடுகள்.

இ. சுந்தரமூர்த்தி, (Sole Agent)
பெரியகடை, யாழ்ப்பாணம்.

c/o S. Veeragathipillai & Sons.

( Y. 21  11-8-40—10-8-41.)  வி



S. S. C. பரீக்ஷை இலக்கியம் (1941)

# பாரதம்-கிருஷ்ணன்றூது சருக்கம்

மூலமும் உரையும்

பல வருடங்கள் J. S. C.; S. S. C. பரீட்சை இலக்கியங்களுக்கு விசேடமாகிய உரைநூல்கள் இயற்றி வெளியிட்டவரும், பண்டித, பாலபண்டித; பரீட்சை வகுப்புக்களுக்குப் போதித்த அநுபவம் வாய்ந்த இயற்றமிழ்ப் போதகாசிரியரும், வண்ணார்பண்ணை-நாவலர் வித்தியாசாலைத் தலைமையாசிரியருமாகிய

திரு. வித்துவான், ந. சுப்பையாபிள்ளை அவர்கள்

மேற்படி பரீட்சைக்காகிய முறையில் இயற்றிய விசேட விரிவுரையுடன் அச்சிடப் பெற்றுள்ளது.

பிரதி எம்மிடத்திலும் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதியொன்றின் விலை ரூபா 1 சதம் 10

தொகையாக வாங்கும் ஆசிரியர்களுக்கும் வியாபாரிகளுக்கும் தக்க கழிவு கொடுக்கப்படும்

இந்துசாதனம்)
20.8-40 )  மனேஜர்.



விளம்பர விகிதம்

முதன்முறைக்கு:

ஒரு அங்குலம் ரூபா 10.00  அரைக்கலம் ரூபா ...
கால்கலம் ரூபா 4.00  ஒரு அங்குலம் ரூபா 1.00

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி

சாதாரண சிறுதத விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜருடன் நேரிற் கண்டோ அல்லது எழுத்து மூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாம். உடன்படிக்கை அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

பத்திரக்கிரயம்

வருஷம் ஒன் றுக்கு யாழ்ப்பாணப்பட்டினக் கையொப்பக்காரர்க்கு தமிழ் ரூபா 5.00 இங்கிலீஷ் தமிழும் 9.00
இலங்கை இந்தியா 8.00 இங்கிலீஷ் தமிழும் 12.00
தொலைவாய் பகுதி 9.00 இங்கிலீஷ் தமிழும் 13.00

தனிப்பிரதி சதம் 5

முற்பணமாக அனுப்பப்படல் வேண்டும்


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.


Printed and Published by S. ADCHALINGAM residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday August 14th 1941.